# ශ්‍රී ලංකා ජනරජයේ ගැසට් පත්‍රය

## ஸ்ரீ லங்கா (இலங்கை) குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

**අංක 44 — 1973 ජනවාරි 26 වැනි සිකුරාදා — 1973.01.26**

44 ம் இலக்கம்—1973 ம் ஆண்டு **சனவரி** மாதம் 26 ந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி IV — உள்ளூராட்சி

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாகக் கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன)


| | பக்கம் |
|---|---|
| உள்ளூராட்சி அறிவித்தல்கள் .. .. | 33 |
| பதவிகள்—வெற்றிடம் .. .. | 37 |
| பரீட்சைகளும், பரீட்சைப் பெறுபேறுகளும், பிறவும் .. | 41 |
| துணை விதிகள் .. .. | 41 |
| உள்ளூராட்சி அதிகார நிலையத் தேர்தற் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள் .. ... | — |
| வரவு செலவுக் கூற்றுக்கள் .. .. .. | — |
| வரவு செலவுத் திரட்டுகள் .. .. .. | — |
| ஆதன விற்பனைகள் .. .. .. | — |
| வீதிச் செயற்குழுவின் அறிவித்தல்கள் .. .. | — |
| நானாவித அறிவித்தல்கள் .. .. .. | 42 |


*கவனிக்க.—கிராம நீதிமன்றங்கள் (திருத்தம்) சட்டமூலம் 1973 ம் ஆண்டு சனவரி மாதம் 19 ந் திகதிய ஸ்ரீ லங்கா (இலங்கை) குடியரசு வர்த்தமானப் பத்திரிகையின் பகுதி II ற்கு குறைநிரப்பியாகப் பிரசுரிக்கப்பட்டுள்ளது.*

## உள்ளூராட்சி அறிவித்தல்கள்

### கிராமச் சபைகள் கட்டளைச் சட்டம்

(257 ஆம் அத்தியாயமான) கிராமச் சபைகள் கட்டளைச் சட்டத்தின் 8 ஆம் பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களைக் கொண்டு அரசாங்க நிர்வாக, உள்ளூராட்சி, உள்நாட்டலுவல்கள் அமைச்சர், பீலிக்ஸ் றெஜினோல்ட் டயஸ் பண்டாரநாயக்க ஆகிய நான் வடமேல் மாகாணம் குருநாகல் மாவட்டத்திலுள்ள பிங்கிரிய பெரும்பாக அரசிறை அலுவலர் பிரிவிலுள்ள பிங்கிரியக் கிராமப் பிரதேசத்தில் தற்போதுள்ள வட்டாரங்களை உட்பிரிவினை செய்வது சம்பந்தமாக 1972 செத்தெம்பர் 29 இன் 27 ஆம் இலக்க கசெற்றில் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தலை, அதனோடுள்ள அட்டவணையிலுள்ள சகல விவரங்களுக்கும் பதிலாக இதனோடுள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள விவரங்களை இடுவதன் மூலம் இவ்வறிவித்தல் வாயிலாகத் திருத்துகிறேன்.

எப். ஆர். டீ. பண்டாரநாயக்க,
அரசாங்க நிர்வாக, உள்ளூராட்சி,
உள்நாட்டலுவல்கள் அமைச்சர்.

கொழும்பு,
1972 ம் ஆண்டு டிசெம்பர் மீ 18 ந் உ.

அட்டவணை

**பிங்கிரியக் கிராமப் பிரதேசம்**

| நிரை I<br>தற்போதுள்ள வட்டாரங்கள் | நிரை II<br>புதிய வட்டாரங்கள் |
|---|---|
| இல. 410 மனலெம்புவ .. | 3 ஆம் வட்டாரம்—மனலெம்புவ—மனலெம்புவ அகற கொறகஹபொக்குக, கொஸ்கஹகொட எகொடபிற்றிய பிந்தரிகஸ்கொட ஆகிய கிராமங்களைக் கொண்டது. |
| | 4 ஆம் வட்டாரம்—வீரபொக்குன—வீரபொக்குன தலவில, ஹென கஹபிற்றிய, அலுத்தகம தினியமகவத்த ஆகிய கிராமங்களைக் கொண்டது |
| | 5 ஆம் வட்டாரம்—தினியக—இஹனகிலியமக் கிராமத்தைக் கொண்டது |
| இல. 412 கினியம .. | 6 ஆம் வட்டாரம்—கொங்கந்தனில—இஹல கொங்கந்தவல பஹலகொங்கந்தவல, ஆண்டிகெதற, பஹலகினியம, கிரிந்தகம இஹலதலம்பொல, கொல்லந்தலுவ கீக்கினியகெதற ஆகிய கிராமங்களையும் ஆண்டிகெதறத் தோட்டத்தையும் கொண்டது |
| | 7 ஆம் வட்டாரம்—லெலங்கிரிய—வெலங்கிரிய வட்டதலுபொத்த புவத்கஹகடவல, பஹலதலம்பொல அக்குல்ல பொக்குன ஆகிய கிராமங்களைக் கொண்டது |
| இல. 413—கல்வெவ .. | 8 ஆம் வட்டாரம்—கொசேன அகற—கொசேன |

**வாராந்த வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு அனுப்பப்படும்
அறிவித்தல்கள் சம்பந்தமான விசேட அறிவித்தல்**

எதிர்வரும் வாராந்த வர்த்தமானிகள் பிரசுரிக்கப்படும் திகதிகள், வர்த்தமானி அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதிகள், நேரங்கள் சம்பந்தமாக இவ்வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதி இறுதியிலும் வெளிவரும் முக்கிய அறிவித்தலைக் கவனிக்குமாறு வேண்டப்படுகிறது. வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு மேற்கூறிய அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் உரிய விலாசதாரருக்குத் திருப்பி அனுப்பிவைக்கப்படும்.

**எல். டபிள்யூ. பீ. பீரிஸ்,**
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு,
1972 ம் ஆண்டு மே மீ 5 ந் உ.

| நிரை I தற்போதுள்ள வட்டாரங்கள் | நிரை II புதிய வட்டாரங்கள் |
|---|---|
| இல. 414—பிரஹமநாயகம | அகற, தியகெலியாவ, திசோகம பஹல ரம்பே பிற்றிய இஹலரம்பேபிற்றிய ஆகிய கிராமங்களைக் கொண்டது |
| | 9 ஆம் வட்டாரம்—கெத்துலாவ—கெத்துலாவ மொல எலிய, பொகொடயாகம, மடிகே, வெல்லங்கிரிய கங்சந்துவ ஆகிய கிராமங்களையும் இல்ஹம் வத்த சியம்பலாவெலவத்த, நுவனேலியவத்த தோட்டங்களையும் கொண்டது |
| | 10 ஆம் வட்டாரம்—கல்வெவ—இஹலகல்வெவ பஹலகல்வெவ, இஹலமொலெய்லிவிற்றிய, பஹல்மொலெய்லி பிற்றிய கடொல்வக்க ஆகிய கிராமங்களையும் கொண்டது |
| | 11 ஆம் வட்டாரம்—பிரஹமநாயகம—பிரஹ்மநாயகம, பெலியொத்த, ஓட்டுபல்லம, மோறவில, ஹபொத்த, நிந்தம் புகம, லபுயாய, மறந்தவிலவத்த ஆகிய கிராமஙகளைக் கொண்டது |
| இல. 415—பிங்கிரிய | 12 ஆம் வட்டாரம்—மூக்கலன்ஹெனை—மூக்கலன்ஹெனை, ரம்பேகம, காவ்வெவ ஆகிய கிராமங்களைக் கொண்டது |
| | 13 ஆம் வட்டாரம்—பிங்கிரிய—பிங்கிரிய முருகந்திய தலகஹபிற்றிய, விஹாரகம, கொடாவெல ஆகிய கிராமங்களைக் கொண்டது |
| இல. 416—மௌனவ | 14 ஆம் வட்டாரம்—மௌனவ—மௌனவ, போவத்த, தனுபொத்த ஹித்தகம, திவுலபிற்றியகம ஆகிய கிராமங்களைக் கொண்டது |
| | 15 ஆம் வட்டாரம்—கொஸ்வத்த—கொஸ்வத்த, வதுரெஸ்ஸ ஆகிய கிராமங்களைக் கொண்டது |
| | 16 ஆம் வட்டாரம்—பனவெவ—பனவெவக் கிராமத்தைக் கொண்டது |

1–741/1—26.01.73 ந் திகதிய வர்த்தமானி இல. 44

---

**கிராமச் சபைகள் கட்டளைச் சட்டம்**

(257 ஆம் அத்தியாயமான) கிராமச் சபைகள் கட்டளைச் சட்டத்தின் 5 ஆம் பிரிவினல் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களைக் கொண்டு அரசாங்க நிர்வாக, உள்ளூராட்சி, உள்நாட்டலுவல்கள் அமைச்சர், பீலிக்ஸ் றெஜிரேனல்ட் டயஸ் பண்டாரநாயக்க ஆகிய நான், களுத்துறை மாவட்டத்திலுள்ள பஸ்துங் கோறளே மேற்குப் பெரும்பாக அரசிறை அலுவலர் பிரிவிலுள்ள தொடங்கொடக் கிராமப் பிரதேசத்தின் எல்லைகளை மாற்றி, மீளவரை செய்வது சம்பந்தமாக 1972 நவெம்பர் 9 இன் 32/4 ஆம் இலக்க அதிவிசேட கசெற்றில் பிரசுரிக்கப்பட்ட கட்டளையை அதன் கண்ணுள்ள "1973" என்னும் இலக்கங்களுக்குப் பதிலாக "1974" என்னும் இலக்கங்களை இடுவதன் மூலம் இக்கட்டளை வாயிலாகத் திருத்துகிறேன்.

எப். ஆர். டீ. பண்டாரநாயக்க,
அரசாங்க, நிர்வாக, உள்ளூராட்சி,
உள்நாட்டலுவல்கள் அமைச்சர்.

கொழும்பு,
1972 ம் ஆண்டு டிசெம்பர் மீ 15 ந உ.

1–741/2—26.01.73 ந் திகதிய வர்த்தமானி இல. 44

---

**கிராமச் சபைகள் கட்டளைச் சட்டம்**

(257 ஆம் அத்தியாயமான) கிராமச் சபைகள் கட்டளைச் சட்டத்தின் 8 ஆம் பிரிவினல் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களைக் கொண்டு அரசாங்க நிர்வாக, உள்ளூராட்சி, உள்நாட்டலுவல்கள் அமைச்சர், பீலிக்ஸ் றெஜிரேனல்ட் டயஸ் பண்டாரநாயக்க ஆகிய நான், களுத்துறை மாவட்டத்திலுள்ள பஸ்துங்கோறளே மேற்குப் பெரும்பாக அரசிறை அலுவலர் பிரிவிலுள்ள தொடங்கொட, நேபொட ஆகிய கிராமப் பிரதேசங்களில் தற்போதமைந்துள்ள வட்டாரங்களை உட்பிரிவினை செய்வது சம்பந்தமாக 1972 நவெம்பர் 9 இன் 32/4 ஆம் இலக்க அதிவிசேட கசெற்றில் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தலை, அதன் கண்ணுள்ள 3 (அ), (ஆ) ஆகிய பந்திகளில் உள்ள "1973" என்னும் இலக்கங்களுக்குப் பதிலாக "1974" என்னும் இலக்கங்களை இடுவதன் மூலம் இவ்வறிவித்தல் வாயிலாகத் திருத்துகிறேன்.

எப். ஆர். டீ. பண்டாரநாயக்க,
அரசாங்க நிர்வாக, உள்ளூராட்சி,
உள்நாட்டலுவல்கள் அமைச்சர்.

கொழும்பு,
1972 ம் ஆண்டு திசெம்பர் மீ 15 ந உ.

1–741/3—26.01.73 ந் திகதிய வர்த்தமானி இல. 44

---

**கிராமச் சபைகள் கட்டளைச் சட்டம்**

(257 ஆம் அத்தியாயமான) கிராமச் சபைகள் கட்டளைச் சட்டத்தின் 610 ஆகிய பிரிவுகளினல் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களைக் கொண்டு அரசாங்க நிர்வாக, உள்ளூராட்சி, உள்நாட்டலுவல்கள் அமைச்சர், பீலிக்ஸ் றெஜிரேனல்ட் டயஸ் பண்டாரநாயக்க ஆகிய நான், களுத்துறை மாவட்டத்திலுள்ள பஸ்துங்கோறளே மேற்குப் பெரும்பாக அரசிறை அலுவலர் பிரிவிலுள்ள நேபொடக் கிராமப் பிரதேசத்தின் அமைப்பு சம்பந்தமாக 1972 நவெம்பர் 9 இன் 32/4 ஆம் இலக்க அதிவிசேட கசெற்றில் பிரசுரிக்கப்பட்ட கட்டளையை, அதன் கண்ணுள்ள 2 ஆம் பந்தியில் உள்ள "1973" என்னும் இலக்கங்களுக்குப் பதிலாக "1974" என்னும் இலக்கங்களை இடுவதன் மூலம் இக்கட்டளை வாயிலாகத் திருத்துகிறேன்.

எப். ஆர். டீ. பண்டாரநாயக்க,
அரசாங்க நிர்வாக, உள்ளூராட்சி,
உள்நாட்டலுவல்கள் அமைச்சர்.

கொழும்பு,
1972 ம் ஆண்டு டிசெம்பர் மீ 15 ந உ.

1–741/4—26.01.73 ந் திகதிய வர்த்தமானி இல. 44

---

எல்.ஜீ.டீ/எச்.ஈ. 1/1/16

**கிராமச் சபைகள் கட்டளைச் சட்டம்**

(257 ம் அத்தியாயமான) கிராமச் சபைகள் கட்டளைச் சட்டத்தின் 47 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவினல் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களைக் கொண்டு அரசாங்க நிர்வாக, உள்ளூராட்சி, உள்நாட்டலுவல்கள் அமைச்சர் பீலிக்ஸ் றெஜிரேனல்ட் டயஸ் பண்டாரநாயக்க ஆகிய நான், சொல்லப்பட்ட பிரிவின் (1) ஆம் உட்பிரிவு மாத்தறை மாவட்டத்திலுள்ள கணங்கை கிராமப் பிரதேசத்தின் கிராமச் சபைக்கு ஏற்புடையதாதலாகாது என இத்தால் வெளிப்படுத்துகிறேன்.

பீலிக்ஸ் ஆர். டீ. பண்டாரநாயக்க,
அரசாங்க நிர்வாக, உள்ளூராட்சி,
உள்நாட்டலுவல்கள் அமைச்சர்.

கொழும்பு.
1973 ம் ஆண்டு ஜனவரி மீ 4 ந உ.

1–906—26.01.73 ந் திகதிய வர்த்தமானி இல.44

எல். டீ. பீ. 22/53

**மின்சக்திச் சட்டம்**

1957 ம் ஆண்டின் 59 ம் இலக்கச் சட்டத்தாற் திருத்தப்பட்டபடியான (205 ம் அத்தியாயமாம்) மின்சக்தி பற்றிய சட்டத்தின் 46 ம் பிரிவின் கீழும், நீர்ப்பாசன, மின்சக்தி, பெருந்தெருக்கள் அமைச்சரைக் கலந்தாலோசித்த பின்னர் அரசாங்க நிர்வாக, உள்ளூராட்சி, உள்நாட்டலுவல்கள் அமைச்சர் அளித்த அங்கீகாரத்துடனும் அக்குரஸ்ஸ பட்டின சபையினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.

பீ. சிறிவர்த்தன,
மேலதிக செயலாளர்,
அரசாங்க நிர்வாக, உள்ளூராட்சி,
உள்நாட்டலுவல்கள் அமைச்சு.

கொழும்பு,
1973 ம் ஆண்டு சனவரி மீ 9 ந உ.

**ஒழுங்கு விதிகள்**

1. இவ்வொழுங்கு விதிகளில்—

"சட்டம்" எனில் 1957 ம் ஆண்டின் 59 ம் இலக்கச் சட்டத்தாற் திருத்தப்பட்டபடியான (205 ம் அத்தியாயமாம்) மின்சக்திச் சட்டம் எனப் பொருள்படும்.

"உத்தரவுப்பத்திரம்" எனில் சட்டத்தின் 2 ம் பிரிவின் கீழ் அக்குரஸ்ஸ பட்டின சபைக்கு வழங்கப்பட்ட உத்தரவுப்பத்திரம் எனப்பொருள்படும்.

"உத்தரவுப்பத்திரக்காரர்" எனில் அக்குரஸ்ஸ பட்டின சபை எனப் பொருள்படும்.

2. உத்தரவுப்பத்திரகாரரிடமிருந்து மின்சக்தி பெறவிரும்பும் எவரும்—

(1) விநியோகம் தேவைப்படுவதற்குக் குறைந்தது பதினன்கு நாட்களுக்கு முன்னராவது உத்தரவுப்பத்திரக்காரர் அதற்கென வழங்கும் படிவத்தில் உத்தரவுப்பத்திரக்காரருக்கு விண்ணப்பஞ் செய்ய வேண்டும்; மேலும்

(2) வழங்கு கம்பிகளுக்கான செலவுகளை உத்தரவுப்பத்திரக்காரருக்கு முற்பணமாகச் செலுத்த வேண்டும், அல்லது உத்தரவுப்பத்திரதாரர் அவ்விதங் கோட்டால் சட்டத்தின் 33 ம் பிரிவின் கீழ் உத்தரவுப்பத்திரதாரருடன் எழுத்திலான ஒரு ஒப்பந்தமும் செய்தல் வேண்டும்.

(3) உத்தரவுப்பத்திரகாரரின் மின்சக்தி வழங்கு மூலக்கம்பிகளுடன் இணைக்கக் கருதியுள்ள நிறுப்பு எதனதும் கம்பியிடும் வேலையை மின்னேந்திரவியற் பொறியியலாளர் கழகத்தினால் விதிக்கப்பட்ட கம்பியிடுதல் பற்றிய ஒழுங்குவிதிகளுக்கமைய அவ்வேலையைச் செய்து முடிக்கக்கூடிய திறைமையுள்ள ஒரு தொழிற்ருபனத்திடம் அல்லது தனியார் ஒருவரிடம் பாவனையாளர் ஒப்படைத்தல் வேண்டும். அவ்வேலையை உத்தரவுப் பத்திரக்காரரினால் அதிகாரமளிக்கப்பட்ட ஒரு உத்தியோகத்தர் பரிசோதித்து, பரீட்சித்துப்பார்த்த பின்னரும், அவ்வேலை முன்னே சொல்லப்பட்ட கம்பியிடுதல்பற்றிய ஒழுங்கு விதிகளுக்கமைவாகச் செய்யப்பட்டுள்ளதென உத்தரவுப்பத்திரகாரர் திருப்தியடைந்த பின்னரும் மாத்திரமே அந்நிறுப்புக்கு மின்சக்தி விநியோகம் இணைக்கப்படுதல் வேண்டும்.

(ஆ) அந்நிறுப்பு சொல்லப்பட்டுள்ள ஒழுங்கு விதிகளுக்கமைவாக இல்லாவிட்டால் அந்நிறுப்பு அவ்வொழுங்கு விதிகளுக்கமைய அமைக்கப்படும்வரையில் அம்மனையகத்துக்கு மின்சக்தி விநியோகம் செய்யப்பட்டமாட்டாது.

4. மின்சக்தி உபயோகிக்கும் ஒவ்வொருவரும் அம்மின்சக்திக்காக உத்தரவுப்பத்திரத்தில் விவரிக்கப்பட்ட விகிதத்தில் பணம் செலுத்த வேண்டும்.

5. (அ) பாவனையாளரின் மனையகத்தில் இருக்கும் சேவைவடக்கம்பிகளின் பாகமும் அம்மின்மாற்றியும், பிரதான பியூஸ்களும், மானியும் தாங்கு பலகையும் உத்தரவுப்பத்திரகாரரின் சொத்துக்களாகவே இருக்கும். எக்காரணத்தைக் கொண்டும் உத்தரவுப்பத்திரக்காரரினால் அதிகாரமளிக்கப்பட்ட அவரது ஊழியரல்லாத எவரும் அவற்றை அகற்றவோ அல்லது தலையிடவோ கூடாது.

(ஆ) பாவனையாளரின் புறத்தில் இருக்கும் உத்தரவுப்பத்திரக்காரரின் பிரதான பியூஸ், மானி ஆகியவற்றின் கம்பிகள், வடக்கம்பிகளையும் வேறு உபகரணங்களையும் பராமரிப்பது பாவனையாளரின் பொறுப்பாகும்.

(இ) சட்டத்தின் 47 (3) ம் பிரிவின்படி துணிக்கப்பட்ட நிறுப்பு எதும் மீண்டும் இணைக்கப்பட்டால், அந்நிறுப்பை பரிசோதித்து மீண்டும் இணைப்பதற்குரிய சலார், உத்தரவுப்பத்திரத்தில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளவாறு அறவிடப்படும். அதனைப் பாவனையாளர் முற்பணமாகச் செலுத்திவிடவேண்டும்.

(ஈ) எப்பாவனையாளரதும் கம்பிகளின் அல்லது பொருத்துகளின் சில பாகங்களின் ஒழுக்கு இருக்கும் பட்சத்தில், தமது மனையகத்தின் மானிகாட்டும் சக்திச் செலவு யாவற்றுக்கும் மின்சக்திச் சட்டத்தின் 41 ம் பிரிவிற்கிணங்க அவர் பணஞ் செலுத்தப் பாத்திரராவார்.

6. (அ) தமது மனையகத்துக்கு மின்சக்தி வழங்கப்பட்ட பின்னர், ஏற்கனவே உபயோகித்துவந்ததைவிடப் பெரிய அளவான எந்த விளக்கையும் விசிறியையும் அல்லது மோத்தரையும் உபயோகிக்க அல்லது மேலதிகமாக விளக்கெதையும் அல்லது மின்சக்தியைச் செலவிடும் உபகரணம் எதையும் தற்காலிகமாகவோ அல்லது நிரந்தரமாகவோ பொருத்தவோ அல்லது தமது மனையகத்தில் பொருத்தப்பட்டுள்ள கம்பிகளை மாற்றவோ அல்லது விஸ்தரிக்கவோ விரும்பும் பாவனையாளர் ஒவ்வொருவரும், அப்படியான வேலை ஆரம்பிப்பதற்குக் குறைந்தது இரண்டு நாட்களுக்கு முன்னராவது உத்தரவுப்பத்திரக்காரருக்கு எழுத்து மூலம் அறிவித்தல் வேண்டும்.

(ஆ) முன்பிருந்ததைவிடப் பெரிய விஸ்தரிப்பு, விளக்கு, விசிறி அல்லது மோத்தர் எதனையும் அல்லது மேலதிக விளக்கு அல்லது சக்தியைச் செலவிடும் வேறு உபகரணம் எதையும் அவ்வித விஸ்தரிப்பு, விளக்கு, விசிறி, மோத்தர், மேலதிக விளக்கு அல்லது வேறு உபகரணத்தை உத்தரவுப்பத்திரக்காரரால் அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர் ஒருவர் பார்வையிட்டுச் சோதித்துத் திருப்திப்படாதவரையில் எப்பாவனையாளரும், தற்காலிகமாகவோ அல்லது நிரந்தரமாகவேனும் பிரதான நிறுப்புடன் இணைக்கவோ இணைக்கச் செய்யவோ அல்லது நிறுவவோ கூடாது.

7. (அ) எவ்வீட்டிலும் உத்தரவுப்பத்திரக்காரரின் பியூஸ் உருகிப் போகும் பட்சத்தில் பாவனையாளர் உடனடியாக உத்தரவுப்பத்திரக்காரருடைய விசைநிலைய அல்லது சகவிசை நிலைய, அவ்வதற்கேற்றவாறு பொறுப்பாளருக்கு அறிவிக்க வேண்டும்.

(ஆ) உத்தரவுப்பத்திரக்காரரால் அதிகாரமளிக்கப்பட்ட ஒரு உத்தியோகத்தர் அல்லது வேலையாள் எவரையும் தவிர்ந்த வேறெவரும் உத்தரவுப்பத்திரக்காரரின் சொத்தான உருகிப்போன பியூசை மாற்றக்கூடாது.

(இ) பாவனையாளருக்கு அல்லது உத்தரவுப்பத்திரக்காரருக்கு சொந்தமான பியூஸ் எதனையும் மாற்றுவதற்காக உத்தரவுப்பத்திரக்காரருடைய உத்தியோகத்தர் அல்லது வேலையாள் எவரதும் உதவி அவசியப்பட்டால், உத்தரவுப்பத்திரத்தில் சொல்லப்பட்டவாறன கட்டணம் ஒன்று பாவனையாளரின் அந்த மாதக் கணக்கில் சேர்க்கப்படும்.

8. வெளிப்படையாகவோ அல்லது மறைமுகமாகவோ ஏற்படும் முழு அல்லது பகுதி சக்தி விநியோகத்தடைப்பாட்டினால் உண்டாகும் நஷ்டம் அல்லது சேதம் எதற்கும் உத்தரவுப்பத்திரக்காரர் பாவனையாளருக்குப் பொறுப்பாளியாகமாட்டார்.

9. சட்டத்தின் 45 ம் பிரிவின்படிக்குத் துணிக்கப்பட்டிருந்தபின் ஒரு நிறுப்பு மீண்டும் இணைக்கப்படுமாயின், சோதித்து மீளவும் இணைப்பதற்காக உத்தரவுப்பத்திரத்தில் சொல்லப்பட்டவாறன ஒரு கட்டணத்தைப் பாவனையாளர் முற்பணமாகக் கொடுத்துவிடவேண்டும்.

10. (அ) கணக்குக் கொடுக்கப்பட்ட திகதியன்றே சகல கட்டணங்களும் கொடுபட வேண்டியனவாகக் கருதப்படும்.

(ஆ) ஒரு கணக்கில் பிழையிருப்பதாகச் செய்யப்படும் முறைப்பாடு எதுவும் பாவனையாளருக்குக் கணக்குக் கொடுக்கப்பட்ட ஒரு கிழமைக்குள் செய்யப்படாவிட்டால் உத்தரவுப்பத்திரக்காரர் அதனை ஏற்கமாட்டார்.

11. (அ) தனது வீட்டுக்கு மின்சக்தி விநியோகம் தேவைப்படாத பாவனையாளர் ஒவ்வொருவரும் உத்தரவுப்பத்திரக்காரருக்கு எழுத்தில் மூன்று முழு நாளைய அறிவித்தல் கொடுக்க வேண்டும்.

(ஆ) (அ) ம் பந்தியில் குறிப்பிடப்பட்ட அறிவித்தல் கொடுக்கப்படாத விடத்து தனது வீட்டிலுள்ள உத்தரவுப்பத்திரக்காரரின் உபகரணங்களுக்குப் பாவனையாளர் பொறுப்பாளியாக இருப்பதுடன், பாவனையாளருக்கு அவ்விநியாகம் தேவையில்லையென உத்தரவுப்பத்திரக்காரருக்கு அறிவித்தல் கிடைத்த தினத்திலிருந்து மூன்று நாட்களுக்கு அவ்வீட்டில் செலவாகிய சக்தி முழுவதற்கும் பணஞ் செலுத்துதற்குப் பொறுப்பாளியாக இருப்பார். எனினும், சொல்லப்பட்ட மூன்று நாட்கள் கடக்கு முன்னர் உத்தரவுப் பத்திரக்காரரால் விநியோகம் துணிக்கப்பட்டால் துணிக்கப்பட்ட நேரம் வரைக்கும் அவ்வீட்டில் செலவான மின்சக்திக்கு மாத்திரமே பாவனையாளர் பணம் செலுத்தப் பாத்திரராவார்.

12. இருந்து வரும் இணைப்புகளுக்கு சேர்தல், மாற்றுதல், செம்மைப்படுத்தல் உட்பட்ட மின்சார இணைப்புவேலை எதனையும் தொடங்குதற்கு இரண்டு நாட்களுக்குக் குறையாத அறிவித்தல் ஒன்றை உத்தரவுப்பத்திரக்காரருக்குக் கொடுத்து உத்தரவப்பத்திரக்காரரின் ஒரு உத்தியோகத்தர் உத்தேச வேலையைப் பரிசோதிக்க வாய்ப்பளிக்காது தொடங்கக்கூடாது.

13. உத்தரவுப்பத்திரக்காரருக்கு அறிவித்தல் கொடுத்து அவரது முன்னங்கீகாரத்தைப் பெறாது எம்மனையகத்திலும் புதிய இணைப்பு எதற்கும் மின்சார வேலை செய்யப்படின் உத்தரவுப்பத்திரக்காரருக்கு முறைப்படியான அறிவித்தல் கிடைத்து அவசியமான பரிசோதனைகள் செய்யப்படுகின்றவரை, அத்தகைய வேலை செய்யப்பட்டுள்ள மனைய கத்திற்கு மின்சக்தி வழங்குதற்கு உத்தரவுப்பத்திரக்காரர் மறுக்கலாம்.

14. உத்தரவுப்பத்திரக்காரரின் மின்சார விநியோக மூலக்கம்பிக ளோடு ஏற்கனவே இணைக்கப்பட்டுள்ள நிறுப்பு எதற்கும், உத்தரவுப் பத்திரக்காரருக்கு முன்னறிவித்தல் கொடுத்து அனுமதிபெறாமல் விஸ்த ரிப்பு ஏதும் செய்யும் பட்சத்தில் அந்நிறுப்பு முற்றாக உத்தரவுப்பத்தி ரக்காரருடைய மின்சார விநியோக மூலக்கம்பிகளிலிருந்து துண்டிக்கப் படப் பாத்திரமானதாகும்.

15. எந்த நிறுப்பையும் மீண்டும் இணைப்பதற்காக விண்ணப்பம் ஒவ்வொன்றும் உத்தரவுப்பத்திரக்காரர் அதற்கென வைத்துள்ள படி வத்தில் செய்யப்பட்டு மின்சக்தி தேவைப்படுவதற்கு நாற்பத்தெட்டு மணித்தியாலங்களுக்குக் குறையாத காலத்துள் உத்தரவுப்பத்திரக்கார ரின் காரியாலயத்தில் கொடுக்கப்பட வேண்டும்.

1—877—26.01.73 ந் திகதிய வர்த்தமானி இல. 44

---

எஸ்.டி.பி 89/52

### வாடிவீடுகள் சட்டம்

(275 ஆம் அத்தியாயமான) வாடிவீடுகள் சட்டத்தின் 4 ஆம் பிரிவின்கீழ், அதன் சார்பில் அதற்குத் தோதான அதிகாரியான கண்டி மாநகர சபையின் விசேட ஆணையாளரால் பேராதனை வாடிவீடு சம்பந்தமாக ஆக்கப்பட்டு அப்பிரிவினால் தமக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களைக்கொண்டு அரசாங்க நிர்வாகம், உள்ளூராட்சி, உள்நாட்டலுவல்கள் அமைச்சரால் அங்கீகரிக்கப்பட்ட விதி.

பீ. சிறிவர்த்தன,
மேலதிகச் செயலாளர்.
அரசாங்க நிர்வாகம், உள்ளூராட்சி,
உள்நாட்டலுவல்கள் அமைச்சு.

கொழும்பு,
1973 ம் ஆண்டு ஜனவரி மீ 6 ந் வ.

### விதி

1958, சனவரி 10 இன் 11,236 ஆம் இலக்க அரசாங்கக் கசெற்றில் பிரசுரிக்கப்பட்டு, காலத்திற்குக் காலம் திருத்தப்பட்ட பேராதனையிலுள்ள வாடிவீடு சம்பந்தமான விதிகள் 17 ஆம் பிரிவில் இத்தால் பின்வரு மாறு மேலும் திருத்தப்படுகின்றன :—

(அ) அதன் 2 ஆம் பத்தியில் " 10 " என்னும் இலக்கத்துக்குப் பதிலாக " 30 " என்னும் இலக்கத்தை இடுவதன் மூலமும்;

(ஆ) அதன் 3 ஆம் பத்தியில் " 10 " என்னும் இலக்கத்துக்குப் பதிலாக " 30 " என்னும் இலக்கத்தை இடுவதன் மூலமும்.

1—744—26.01.73 ந் திகதிய வர்த்தமானி இல. 44

---

### கொச்சிக்கடை பட்டின சபை

பட்டின சபைகள் கட்டளைச் சட்டம்

### 1973 ம் ஆண்டுக்கான விசேட மலகூட வரி

(256 ம் அத்தியாயமான) பட்டின சபைகள் கட்டளைச் சட்டத்தின் 129 (ஆ) என்னும் பிரிவின் கீழும் அவருக்குக் கையளிக்கப்பட்ட தத்துவங்களைக் கொண்டு உள்ளூராட்சி ஆணையாளரினால் கொடுக்கப்பட்ட அங்கீகாரத்துடனும் துணைவிதிகளினால் விதிக்கப்படக்கூடியவாறான அத் தகைய வரையறைகளுக்கும் விலக்களிப்புகளுக்கும் அமைவாக கொச்சிக் கடைப் பட்டினத்தினுள் அமைந்துள்ள அசைவற்ற ஆதனங்கள் அனைத் தினதும் வருடாந்தப் பெறுமதியின் நூற்றுக்கு நான்கு வீதமானதும் முறையே மார்ச்சு 31, யூன் 30, செத்தெம்பர் 30, திசெம்பர் 31 ஆகிய திகதிகளில் நான்கு தவணைகளில் சமதொகைகளாகச் செலுத்தப்படற் பாலதுமான ஒரு விசேட மலகூட வரியை 1973 ம் ஆண்டுக்கு கொச்சிக் கடைப் பட்டின சபை விதித்துள்ளதென இத்தால் அறிவிக்கப்படு கின்றது.

டபிள்யூ. ஈ. வி. எஸ். டி அல்விஸ்,
உள்ளூராட்சி ஆணையாளர்.

கொழும்பு,
1973 ம் ஆண்டு சனவரி மீ 8 ந் வ.

1—978—26.01.73 ந் திகதிய வர்த்தமானி இல. 44

---

எல்.டி.—பி. 9/66.

### கிண்ணியாப் பட்டினம்

பட்டின சபைகள் கட்டளைச் சட்டம்

### 1973 க்கான ஆதன வரி

(256 ஆம் அத்தியாயமான) பட்டின சபைகள் கட்டளைச் சட்டத்தின் 183(5)(அ) என்னும் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட்ட 159(1) எனும் பிரிவின் கீழும், அப்பிரிவினால் தமக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களைக் கொண்டு அரசாங்க நிர்வாகம், உள்ளூராட்சி, உள்நாட்டலுவல்கள் அமைச்சர் வழங்கிய அங்கீகாரத்துடனும், கிண்ணியாப் பட்டினத்தின் விசேட ஆணையாளரினால் விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய வரையறைகள், தகைமைகள், நிபந்தனைகள் ஆகியவற்றுக்கமைவாகவும், கிண்ணியாப் பட்டினத்தில் அமைந்துள்ள அசைவற்ற ஆதனங்கள் அனைத்தினதும் வருடாந்தப் பெறுமதியின் நூற்றுக்கு நான்கு வீத மானதும் 1973 ஆம் ஆண்டில் முறையே மார்ச்சு 31, யூன் 30, செத் தெம்பர் 30, திசெம்பர் 31 ஆகிய திகதிகளில் அல்லது அவற்றுக்கு முன்னர் நான்கு தவணைகளில் சமதொகைகளாகச் செலுத்தப்படற் பாலதுமான ஒரு வீதவரியை 1973 ஆம் ஆண்டுக்குக் கிண்ணியாப் பட்டினத்தின் விசேட ஆணையாளர் விதித்திருக்கிறாரென இத்தால் அறிவிக்கப்படுகிறது.

பி. சிறிவர்த்தன,
செயலாளர்,
அரசாங்க நிர்வாகம், உள்ளூராட்சி,
உள்நாட்டலுவல்கள் அமைச்சு.

கொழும்பு,
1972 ம் ஆண்டு டிசம்பர் மீ 29 ந் வ.

1—673—26.01.73 ந் திகதிய வர்த்தமானி இல. 44

---

### கெக்கிறாவை பட்டின சபை

பட்டின சபைகள் கட்டளைச் சட்டம்

### 1973 ம் ஆண்டுக்கான விசேட தண்ணீர் வரி

(256 ம் அத்தியாயமான) பட்டின சபைகள் கட்டளைச் சட்டத்தின் 129 (ஆ) என்னும் பிரிவின் கீழும் அவருக்குக் கையளிக்கப்பட்ட தத்துவங்களைக் கொண்டு உள்ளூராட்சி ஆணையாளரினால் கொடுக்கப்பட்ட அங்கீகாரத்துடனும் துணைவிதிகளினால் விதிக்கப்படக்கூடியவாறான அத் தகைய வரையறைகளுக்கும் விலக்களிப்புகளுக்கும் அமைவாக கெக் கிறாவை பட்டினத்தினுள் அமைந்துள்ள (நெல்வயல்கள், தரிசுநிலங்கள் நீங்கலான) அசைவற்ற ஆதனங்கள் அனைத்தினதும் வருடாந்தப் பெறுமதியின் நூற்றுக்கு ஐந்து வீதமானதும் முறையே மார்ச்சு 31, யூன் 30, செத்தெம்பர் 30, திசெம்பர் 31 ஆகிய திகதிகளில் நான்கு தவணைகளில் சமதொகைகளாகச் செலுத்தற்படற்பாலதுமான ஒரு விசேட தண்ணீர் வரியை 1973 ம் ஆண்டுக்கு கெக்கிறாவை பட்டின சபையை நிர்வகிக்கும் உத்தியோகத்தர் விதித்துள்ளாரென இத்தால் அறிவிக் கப்படுகின்றது.

டபிள்யூ. ஈ. வி. எஸ். டி அல்விஸ்,
உள்ளூராட்சி ஆணையாளர்.

கொழும்பு,
1973 ம் ஆண்டு சனவரி மீ 9 ந் வ.

1—981—26.01.73 ந் திகதிய வர்த்தமானி இல. 44

# பதவிகள் வெற்றிடம்

## "ஸ்ரீ லங்கா (இலங்கை) குடியரசு வர்த்தமானப் பத்திரிகை" யின் IV ஆம் பகுதியில் விளம்பரப் படுத்தப்படும் உள்ளூராட்சிச் சேவைப் பதவிகளின் நியமனங்களுக்குப் பொருந்தும் பொது நிபந்தனைகள்

படிகள்.—அரசாங்க உத்தியோகத்தர்களுக்குப் பொருந்தும் விதிகளுக்கும் நிபந்தனைகளுக்கும் இணங்கத் திருமணப்படி கொடுக்கற்பாலது.

2. சேவை நிபந்தனைகள்.—1969 ம் ஆண்டின் 18 ஆம் இலக்க உள்ளூராட்சிச்சேவை அதிகாரச் சட்டத்திற்கும், உள்ளூராட்சிச் சேவைப் பிரமாணங்களுக்கும், அதிகார சபை காலத்திற்குக் காலம் விதிக்கும் மற்றும் எதும் நிபந்தனைகளுக்கும் உட்பட்டதாகவே நியமனங்கள் அமையும்.

3. நியமன விதிகள்.—(அ) உ. ஆ. சேவையில் மாதாந்தச் சம்பளம் பெறும் பதவிகளுக்கு நியமிக்கப்படும் சகல உத்தியோகத்தர்களும் உ. ஆ. சே. சகாயநிதிக்கு கட்டுப்பணம் செலுத்த வேண்டும். ஊழியர் தமது திரட்டிய வேதனத்தில் 6 சதவிகிதத்தைச் செலுத்துமாறு வேண்டப்படுவார். ஊழியர் நியமிக்கப்படும் உள்ளூராட்சி மன்றம், அவர் பொருட்டு இந்நிதிக்கு அவரது திரட்டிய வேதனத்தின் 9 சத விகிதத்தைச் செலுத்தும்.

(ஆ) அரசாங்கத்தின் கீழ் சேவையிலிருக்கும் உத்தயோகத்தர்கள் அரசாங்க இளைப்பாற்றுச் சம்பளம் பற்றிய விதிகளின் 21 வது பிரிவின் படி விடுவிக்கப்பட்டு, உள்ளூராட்சிச் சேவையில் இளைப்பாற்றுச் சம்பளத்திற்குரிய பதவிகளுக்கு இடமாற்றப்பட்டால், அவர்களின் இளைப்பாற்றுச் சம்பள உரிமைகள் பாதுகாக்கப்படும். உள்ளூராட்சிச் சேவையில் ஒரு இளைப்பாற்றுச்சம்பளம் பெறும் பதவியை வகிக்கும் எந்தவொரு ஊழியரும், அச்சேவையில், வேறொரு இளைப்பாற்றுச்சம்பளம் பெறும் பதவிக்கு அவர் பதவியுயர்த்தப்பட்டால் அல்லது நியமிக்கப்பட்டால், அவர் நியமிக்கப்பட்ட அல்லது பதவியுயர்த்தப்பட்ட புதிய பதவியிலும் அவர் தொடர்ந்து இளைப்பாற்றுச்சம்பள உரிமைகளைப் பெறுவார்.

(இ) உள்ளூராட்சித் தாபனங்களில் அவற்றின் இளைப்பாற்றுச் சம்பள விதானங்கள் அல்லது விதிகளின் கீழ் இளைப்பாற்றுச் சம்பளத்திற்குரிய பதவிகளை வகிப்பவர்கள் விடயத்தில், அவர்கள் கடைசியாக இளைப்பாறும் போது கொடுக்கப்படும் இளைப்பாற்றுச் சம்பளம், 1969 ம் ஆண்டின் 18ம் இலக்க உள்ளூராட்சிச் சேவைக் கட்டளைச் சட்டத்தின்கீழ் உள்ளூராட்சிச் சேவைக்கு அவர்கள் மாற்றப்பட்ட திகதிக்கு நேர்முந்தியுள்ள திகதியன்று எந்த உள்ளூராட்சித் தாபனத்தில் வேலை பார்த்தவர்களோ அந்த உள்ளூராட்சித் தாபனத்தின் இளைப்பாற்றுச் சம்பள விதானங்களுக்கு அல்லது விதிகளுக்கு அமைவாக இருக்கும்.

(ஈ) உள்ளூராட்சிச் சேவையில், மாதாந்த வேதனம் பெறும் பதவிகளுக்கு நியமிக்கப்படும் ஊழியர்களுக்கு, விதவைகள் அனாதைகள், இளைப்பாற்றுச் சம்பளத்திட்டம் பொருந்தமாட்டாது. எவ்வாறாயினும் பெண்களும் 55 வயதுக்கு மேற்பட்ட உத்தியோகத்தர்களும். உள்ளூராட்சிச் சேவைக்கு நியமிக்கப்படுவதற்கு நேர்முந்திய தேதியில், அரசாங்க சேவையில் இளைப்பாற்றுச்சம்பளம் பெறும் பதவிகளை வகித்தவர்களும் தவிர, உ. ஆ. சேவையில் இளைப்பாற்றுச்சம்பளம் பெறும் பதவி ஒன்றிலிருந்து அச்சேவையில் வேறொரு இளைப்பாற்றுச் சம்பளம் பெறும் பதவிக்கு நியமிக்கப்படுபவர்களும் அல்லது பதவியுயர்த்தப்படுபவர்கள் 1952ம் ஆண்டு ஜூலை 30 ந் திகதி வெளியான 10,329 இலக்க அரசாங்க விசேட வர்த்தமானியிற் பிரசுரிக்கப்பட்ட, 1952 ம் ஆண்டின் உள்ளூராட்சிச் சேவை விதவைகள், அனாதைகள் இளைப்பாற்றுச் சம்பள நிதிப்பிரமாணங்களின் படி, ஸ்தாபிக்கப்பட்ட உ. ஆ. சே. விதவைகள், அனாதைகள் இளைப்பாற்றுச்சம்பள நிதிக்கு, தங்களது கருதப்படும் அடிப்படைச் சம்பளத்தின் 4 சத விகிதத்தைச் செலுத்த வேண்டும். குறித்த உள்ளூராட்சி மன்றம், கருதப்படும் அடிப்படைச் சம்பளத்தின் 3 சத விகிதத்தைச் செலுத்தும்.

(உ) நியமிக்கப்படுபவர்கள் குறித்த உள்ளூராட்சித் தாபனம் நிர்ணயிக்கும் தொகைக்கு ரொக்கமாக அல்லது உள்ளூராட்சிச் சேவை அதிகார சபை அங்கீகரிக்கும் உத்தரவாதச் சங்கம் ஒன்றின் மூலமாக நம்பிக்கை உத்தரவாத முறிகொண்டு பிணை செலுத்துமாறு வேண்டப்படலாம்.

(ஊ) உள்ளூராட்சிச் சேவையில், அட்டவணைப்படுத்தப்பட்ட பதவிகளை வகிக்காதவர்களாயிருந்து நியமிக்கப்படுபவர்கள் இலங்கையின் எப்பகுதியிலேனும் சேவை செய்வதற்கு வேண்டிய தேக தகுதியுடைமை பற்றி முறையான தகைமை பெற்ற வைத்தியர் ஒருவரின் வைத்திய பரிசோதனையிற் சித்தியெய்துமாறு வேண்டப்படுவர்.

(எ) வேறுவிதம் குறிக்கப்பட்டாலன்றி நியமனம் பொதுவாக மூன்றாண்டு காலத்துக்கு தகுதிகாண் நிலையில் இருக்கும். அல்லது மூன்றாண்டு காலத்துக்குப் பின்னர் உறுதிப்படுத்துவதற்கு அமைவானதாக இருக்கும்.

(ஏ) விண்ணப்பதாரர்கள், வேண்டப்படும் நேரத்தில் தங்களுடைய பிறப்புச்சான்றிதழ்களையோ, அல்லது அதற்குப் பதிலாகத் தங்களுடைய உண்மையான வயதைக் குறிக்கும் சான்றிதழ்களையோ காட்டுவதற்கு ஆயத்தமாக இருத்தல் வேண்டும்.

(ஐ) நியமிக்கப்படுவோர்கள் தீவின் எப்பகுதியிலாயினும் சேவை செய்தல் வேண்டும்.

4. உள்ளூராட்சிச் சேவைக்குப் புதிதாகச் சேரும் உத்தியோகத்தர்கள்.—(1) எப்பதவிக்கேனும் நீடியகாலம் விதிக்கப்பட்டாலன்றி சந்தர்ப்பத்திற்கேற்ப, இளைப்பாற்றுச் சம்பளமுள்ள பதவிகளில்/இளைப்பாற்றுச் சம்பளமில்லாத பதவிகளில் நியமிக்கப்படும் " புதிதாகச் சேரும் உத்தியோகத்தர்களின் " தகுதிகாண் நிலை/பரீட்சார்த்த காலம் மூன்று ஆண்டுகளாக இருக்கும்.

(2) புதிதாகச் சேரும் உத்தியோகத்தர்கள் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையை வினைப்படுத்துவதற்கு ஏதுவாக 1956 ம் ஆண்டின் 33 ஆம் இலக்க அரசாங்க மொழிச்சட்ட ஏற்பாடுகளுக்கும் இனிமேல் ஆக்கப்படும் சட்டங்கள், விதிகளுக்கும் அமைந்தொழுகுவாரென்ற நிபந்தனைகளுக்குட்படல் வேண்டும்.

(3) தமது கடமைகளைத் திறம்பட ஆற்றுவதற்கு அத்தியாவசியமற்ற புறநடையான சந்தர்ப்பங்களில் ஒழிய அவர்கள் தங்களுடைய தகுதிகாண்/பரீட்சைகாண் காலத்தில் அரசகரும மொழியில்—சிங்களத்தில் கடமை செய்யும் அறிவு பெறல் வேண்டும்.

(4) தகுதிகாண்/பரீட்சைகாண் காலமுடிவில் அவர்களின் நியமனம் உறுதிப்படுத்துகின்றமை பிறவற்றோடு, குறிப்பிட்ட கால வரையறைக்குள், க. பொ. த. ப. தரத்திற்கு மேற்படாத நிலைவரையுள்ள, விதிக்கப்பட்ட சிங்களத்தேர்ச்சி சோதனைகளில் சித்தியடைவதைப் பொறுத்திருக்கும். குறிக்கப்பட்ட காலத்துள் இத்தேர்ச்சிச் சோதனையில் சித்தியடையத் தவறினால், சோதனைகளில் தேறும்வரை அவர்களுக்குரிய வேதனப் பெருக்கங்கள் செலுத்தப்படமாட்டாது. சிங்களத்தில் தேர்ச்சியடைய வேண்டிய தரத்தை அடையாத உத்தியோகத்தர்களின் சேவைகள், அவர்களின் தகுதிகாண்/பரீட்சைகாண் காலமுடிவில் நிறுத்தப்படலாம்.

(5) கல்வியும் ஏனைய தகைமைகளும்.—சி. பா. த. ப. பரீட்சை அல்லது அதற்கு சமமான அல்லது உயர்ந்த பரீட்சை ஆகக் குறைந்த தகைமை என்று விதிக்கப்பட்ட எல்லாச் சேர்வுத் திட்டங்களிலும், சிங்கள மொழியில் கல்விபயின்ற, சிங்களப் பரீட்சார்த்தி சிங்கள பாஷையில் அல்லது அதற்குச் சமமானதில் சிரேஷ்ட பாடசாலைத் தராதரப் பத்திரம் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் சித்தியடைந்திருக்க வேண்டும்.

(1968 ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 8 ம் திகதிக்கு முன்னர் தொடக்கம் உள்ளூராட்சிச் சேவையிலிருந்துவரும் உத்தியோகத்தர்களுக்கும், உள்ளூராட்சிச் சேவையிலுள்ள வேறு பதவிகளுக்கு நியமனம் பெறவிருப்பவர்களுக்கும் இந்தத் தகைமை பொருந்தாது).

குறிப்பு.—(1) சிங்களமொழி மூலம் உள்ளூராட்சி சேவையில் புகும் தகைமைபெறும் புதிதாகச் சேரும் உத்தியோகத்தர்கள் உறுதிப்படுத்துவதற்கு ஒரு முன்தேவையாக இத்தேர்ச்சிச் சோதனையில் சித்தியடைவதிலிருந்து விலக்குப்பெறுவர்.

குறிப்பு.—(2) இதில் " புதிதாகச் சேரும் உத்தியோகத்தர்கள் " என்பது அரசகரும மொழிக் கொள்கையின் நோக்கத்தின்படி 1960 ம் ஆண்டு ஜனவரி மாதம் 29 ஆம் திகதியன்று அல்லது அதற்குப் பின்னர் பிரசுரமாகும் விளம்பரங்களின் மூலம் உள்ளூராட்சிச் சேவையிலுள்ள பதவிகளில் நியமிக்கப்படும் உத்தியோகத்தர்களுக்கும் பொருந்தும்.

குறிப்பு.—(3) 4 (3) ஆம், (4) ஆம் பந்திகளில் உள்ள ஏற்பாடுகள் அரசாங்க அலுவலகங்களில் கடமையாற்றும் முன்சேர்ந்த உத்தியோகத்தர்களுக்கும், உள்ளூராட்சிச் சேவையிலுள்ள நியமனங்களை ஏற்பதற்காகப் பதவியிலிருந்து விடுவிக்கப்பட்டவர்களுக்கும் பொருந்தாது.

5. ஒவ்வொரு விண்ணப்பதாரரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபிக்க வேண்டும். " இலங்கையர் " என்பது வம்சாவழியாகவோ பதிவு செய்ததாலோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.

6. போர்ப்படையிற் சேவை செய்த முன்னாள் வீரர்களுக்கான சலுகை.—(அ) விண்ணப்பிக்கப்பட்ட பதவிகளுக்கு விதந்துரைக்கப்பட்ட மிகக் கூடிய வயது எல்லைக்குள் தம்மைக் கொண்டுவர உதவும் விதத்தில் தமது வயதுகளிலிருந்து ஒரமமான படையிற் தாம் ஆற்றிய சேவையைக் கழிப்பதற்கு, போர்ப்படையிற் சேவை செய்த முன்னாள் வீரர்கள் அனுமதிக்கப்படுவர்.

(ஆ) எந்தப் பதவிகளுக்குமுரிய புதிய நியமனத் திட்டத்தில் விதந்துரைக்கப்பட்ட மிகக் குறைந்த கல்வித்தகைமையிலிருந்து, அடுத்துக் குறைவான பரீட்சையைத் தமது மிகக் குறைந்த கல்வித் தகைமையாகக் கருதுவதற்கும் போர்ப்படைவீரர்கள் அனுமதிக்கப்படுவர்.

7. வயதுச்சலுகை.—இருவருட தொடர்ச்சியான சேவையுள்ள நிரந்தரப் பதவி வகிக்கும் உள்ளூராட்சி மன்ற ஊழியர்கள், உள்ளூர் ஆட்சி சேவையிலுள்ள பதவிகள் விளம்பரப்படுத்தப்படும் பொழுது வயது எவ்வாறிருப்பினும் விண்ணப்பிப்பதற்குத் தகுதியுடையவராவர்.

8. வேண்டற்பால ஏனையவை.—(1) உள்ளூராட்சித் தாபனமொன்றில் கடமையாற்றுபவர்களின் விண்ணப்பங்கள், அவர்கள் கடமையாற்றும் உள்ளூராட்சித் தாபனத்தின் மாநகரசபை ஆணையாளர் அல்லது தலைவர் ஊடாக அனுப்பப்படுதல் வேண்டும்.

(2) அரசாங்க சேவையில் இருக்கும் உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் அவ்வப்பகுதிகளின் தலைவர்கள் மூலமாக அனுப்பப்படுதல் வேண்டும். அரசாங்க சேவையில் நிரந்தர பதவிகளை வகிக்கும் உத்தியோகத்தர்களுடைய விண்ணப்பங்களின் விடயத்தில், விண்ணப்பக்காரர் தெரிவுசெய்யப்படின் அவரை விடுதற்குத் தாம் தயாரா ? இல்லையா ? என்பதைச் சம்பந்தப்பட்ட பகுதியின் தலைவர் விண்ணப்பத்தை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.

(3) குறிக்கப்படும் ஒரு நேரத்திலும் இடத்திலும், நேர்முகப் பரீட்சைக்கோ, பரீட்சைக்கோ தோற்றுமாறு அபேட்சகர்கள் வேண்டப்படலாம். இதன் பொருட்டு பிரயாணச் செலவுகளோ வேறு செலவுகளோ கொடுக்கப்படமாட்டாது.

(4) அபேட்சகர் ஒருவரைச் சிபார்சு செய்ய விரும்பும் எவரும் ஒரு குணச்சான்றிதழைக் கொடுப்பதன் மூலம் அதனைச் செய்யலாம். அபேட்சகர் ஒருவருக்குச் சாதகமாக நேர்முகமாகவேனும் மறைமுகமாகவேனும் எவ்விதமான ஆதரவும் தேடுதலேனும் அபேட்சகர்கள் தெரிந்தெடுப்பதற்கு எந்தவிதமான முயற்சியும் செய்தலேனும் அவ்வபேட்சகர்களுக்குத் தகைமையின்மையை உண்டாக்கும்.

(5) விண்ணப்பத்தில் உள்ள கூற்றெதுவும் செம்மையற்றதென்று தெரிவிற்கு முன்னர் காணப்படின் விண்ணப்பதாரருக்கு தகைமையீனத்தை உண்டாக்கும்; தெரிவிற்குப் பின்னர் காணப்படின் அவர வேலையிலிருந்து நீக்கப்படுவதற்குப் பாத்திரராவர்.

(6) இவ்விளம்பரத்தில் வேண்டப்படுவனவற்றுக்கு சகல வகைகளிலும் இணக்கமாயில்லாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

(7) "கீழே இணைக்கப்பட்ட படிவத்தில்" விண்ணப்பங்கள் தயாரிக்கப்பட்டு உள்ளூர் ஆட்சிச் சேவை அதிகாரசபை செயலாளருக்கு முகவரியிடப்பட வேண்டும். நேரடியாக அவருடைய பெயருக்கு அவை அனுப்பப்படக்கூடாது.

(8) முடிவுத் திகதிக்குப் பின்னர் இக்கந்தோரில் பெற்றுக்கொள்ளப்படும் விண்ணப்பங்கள் சாதாரணமாக ஏற்றுக்கொள்ளப்படமாட்டா. விண்ணப்பம் தபாலிற் காணமற்போய்விட்டதோ அல்லது தாமதமாகிவிட்டதோ என்ற குற்றச்சாட்டுகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா. கடைசி நாட்கள் வரை தமது விண்ணப்பங்களை அனுப்பாமல் வைத்திருக்கும் பரீட்சார்த்திகள் தாமாகவே வினையைத் தேடிக்கொள்கின்றனர்

வேறுவிதம் கூறப்பட்டாலன்றி உபயோகிக்கப்பட வேண்டிய விண்ணப்ப மாதிரிப் பத்திரம்

## உள்ளூராட்சிச் சேவை

முக்கியமாகக் கவனிக்க.—(1) விண்ணப்பத்தைக் கீழே விதித்துள்ள முறையில் எழுதி பதவி பற்றிய வர்த்தமானப் பத்திரிகை அறிவித்தலில் சொல்லப்படும் விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளுவதற்கான கடைசித் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் செயலாளர், உள்ளூராட்சிச் சேவை அதிகாரசபை, தபாற் பெட்டி 530, கொழும்பு என்ற விலாசத்தை அடையும் வண்ணம் அனுப்புதல் வேண்டும். விண்ணப்பத்தை செயலாளரின் பெயருக்கு விலாசமிட்டு அனுப்பலாகாது.

(2) விண்ணப்பகாரர் தமது விண்ணப்பங்களை, தயார் செய்யுமுன்னர் மேற்கூறிய பொது நிபந்தனைகளையும் வர்த்தமானப் பத்திரிகை அறிவித்தலின் வேண்டுதலையும் கவனமாக வாசித்து விண்ணப்பிப்பதற்குத் தாங்கள் சகல வகைகளிலும் அருகதையுடையவர்கள்தான் என்பதை நிச்சயப்படுத்திக்கொள்ள வேண்டுமென்று ஆலோசனை கூறப்படுகின்றது விண்ணப்பக்காரர் வர்த்தமானப் பத்திரிகை அறிவித்தலை உசாவி, உரிய சகல தகவல்களையும் தவறாது கொடுக்கவேண்டும்.

(3) விண்ணப்பக்காரர் கீழ்க்காணும் கடனங்களின் பிரதிகளை அவர்களின் விண்ணப்பத்துடன் இணைக்க வேண்டும்.—(1) ஆங்கிலத்தில்/சிங்களத்தில்/தமிழில் சித்தியெய்திய ஆக உயர்ந்த பரீட்சைச் சான்றிதழ் (2) குணச் சான்றிதழ், (3) பதவி அத்தகைய தன்மையதாயின் உயர் தொழில்/தொழில்நுட்பத் தகைமைகளின் சான்றிதழ்.

(4) விண்ணப்பகாரர் மேற்கூறிய பொது நிபந்தனைகளின் 8 ஆம் பந்தியை விசேடமாகக் கவனிக்குமாறு வேண்டப்படுகின்றனர்கள்.

.... .......................(........ ) பதவிக்கான விண்ணப்பம்

1. (அ) வெற்றுப் பதவி விளம்பரப்படுத்தப்பட்டுள்ள வர்த்தமானப் பத்திரிகையின் திகதி : ————.
   (ஆ) .................... ......பதவிக்கான விண்ணப்பம்

2. முழுப்பெயர் (தனித்தனி எழுத்துக்களில்) : ————.
   தேசிய இனம் : ————.
   (மேலேயுள்ள 5 ஆம் நிபந்தனையில் கூறப்பட்டுள்ள வரைவிலக்கணத்தின்படி இலங்கையரா ? இலங்கையரல்லாதவரா ? என்பதைக் கூறுக. நீர் பதிவு மூலம் இலங்கைப் பிரசையாயிருப்பின் பிரசாவுரிமைச் சான்றிதழின் சார்பு எண்ணையும் திகதியையும் கூறுக.)

3. தபால் விலாசம் : ————.
   (விலாசமாற்றமெதுவும் உடனே அறிவிக்கப்பட வேண்டும்.)

4. (அ) விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளுவதற்கான கடைசி திகதியில் சரியான வயது . —
   ————வருடங்கள் ————மாதங்கள் ————நாட்கள்.
   (ஆ) பிறந்த திகதி : — வருடம் : ————.
   மாதம் : ————. திகதி : ————.

5. பிறந்த இடம் : —
   (அ) விண்ணப்பகாரர் :————.
   (ஆ) அவரது பிதா : ————.
   (இ) அவரது பிதாவழிப் பேரன் : ————.
   (ஈ) அவரது பிதாவழிப் பாட்டன் : ————.

   (விண்ணப்பகாரர் இலங்கையில் பிறந்தவராயின் (அ) வுடன் ஒன்றில் (ஆ) வை அல்லது (இ) வையும் (ஈ) வையும் நிரப்புதல் வேண்டும். விண்ணப்பகாரர் இலங்கையில் பிறவாதவராயின் (அ) வோடு, ஒன்றில் (ஆ) வையும் (இ) வையும் அல்லது (இ) வையும் (ஈ) வையும் நிரப்புதல் வேண்டும்.)

6. விவாகமானவரா ? தனியாளரா ? அல்லது தாரமிழந்தவரா ? கைம்பெண்ணா ? : ————

7. 12 வயது தொடக்கம் படித்த பாடசாலைகளும், கல்லூரிகளும் மற்றும் தாபனங்களும் : ————.

| பொதுக் கல்வி | | | உயர் தொழில்/தொழில் நுட்பக் கல்வி | | |
|---|---|---|---|---|---|
| பாடசாலை அல்லது கல்லூரி | சேர்ந்த திகதி | விட்ட திகதி | தாபனம் | சேர்ந்த திகதி | விட்ட திகதி |
| 1 .............. | ...... | ...... | 1 .......... | ...... | ....... |
| 2 .............. | ...... | ...... | 2 .......... | ...... | ....... |
| 3 .............. | ...... | ...... | 3 .......... | ...... | ....... |
| 4 .............. | ...... | ...... | 4 .......... | ...... | ....... |
| 5 .... | ...... | ...... | 5 ..... ... | .... | ...... |

8. கல்வித் தகைமைகள் :—

(அ) சி.பா.த. பத்திரம்/க.பொ.த.ப. (சாதாரண தரம்).

| | பரீட்சையில் சித்தியடைந்த வருடம் | சுட்டிலக்கம் | பாடங்கள் | திறமைச் சித்தி | விசேட சித்தி |
|---|---|---|---|---|---|
| முதல் தடவை | | | | | |
| இரண்டாம் தடவை | | | | | |

(ஆ) க.பொ.த.ப. (உயர்தரம்)

| | பரீட்சையில் சித்தியடைந்த வருடம் | சுட்டிலக்கம் | பாடங்கள் | திறமைச் சித்தி | விசேட சித்தி |
|---|---|---|---|---|---|
| | | | | | |

(இ) வேறும் கல்வித் தகைமைகள் :—

| பரீட்சையின் பெயர் | பரீட்சையில் சித்தியடைந்த வருடம் | சுட்டிலக்கம் | பாடங்கள் |
|---|---|---|---|
| | | | |

(ஈ) கீழ் உள்ளவற்றில் சித்தியடைந்த ஆகக்கூடிய பரீட்சை :—

1 சிங்களம் :————
2 தமிழ் :————
3 ஆங்கிலம் :————

9. இவற்றுள்ள எதும் உயர் தொழில் அல்லது தொழில் நுட்ப அல்லது இருவகைத் தகைமைகளையும் திகதிகளுடனும் தாபனங்களின் பெயர்களுடனும் தருக :————.

10. உயர்தொழில்/தொழில் நுட்ப/தொழில் அனுபவங்கள்

| தாபனத்தின் பெயர் | தொழிற் பயிற்சி வகிக்கப்பட்ட பதவியின் தன்மை | சேர்ந்த திகதி | விட்ட திகதி |
|---|---|---|---|
| | | | |

(சான்றிதழ்களின் பிரதிகள் இணைக்கப்படவேண்டும்)

11. (அ) பாடசாலையை விட்டபின்னர் வகித்த உத்தியோகம் (வகித்த பதவிகளை அவற்றில் சேர்ந்த, அவற்றை விட்ட திகதிகளுடன் தருக):———.

(ஆ) நிரந்தரமாகவேனும் தற்காலிகமாகவேனும் அரசாங்கத்திலாவது உள்ளூராட்சித் தாபனத்திலாவது உத்தியோகத்திலிருந்து அந்த உத்தியோகம் எச்சமயத்திலேனும் நிறுத்தப்பட்டிருப்பின், சேவை நிறுத்தப்பட்டமைக்கான காரணத்தை திகதிகளுடன் விபரமாக விளக்குக :———.

(இ) உள்ளூராட்சிச் சபைகளில் பார்த்த உத்தியோக விவரம் (பதவி, உள்ளூராட்சித் தாபனம், காலம்) :———.

(ஈ) தற்போதைய உத்தியோகம் பற்றிய பின்வரும் விபரங்களைக் கூறுக :—

(1) உத்தியோகப் பதவிப் பெயரும் அதன் தரமும் அதில் நியமிக்கப்பட்ட திகதியும் :———.

(2) தற்போதைய சம்பளமும் (படிகள் நீங்கலாக) சம்பள அளவுத் திட்டமும் :———.

(3) இளைப்பாற்றுச் சம்பளமுண்டா? :———.

(உ) முன்னைநாட் போர்வீரராயின் இருந்த படைப் பிரிவு, வரிசைப் பதவி ஆகியவற்றின் விபரங்களும் சேர்ந்த, விடுபட்ட திகதிகளும் :———.

12. இம்மொழிகளில் யாதேனும், எழுதவும், பேசவும் தேர்ச்சியுண்டா:—

(அ) சிங்களம் :———.

(ஆ) தமிழ் :———.

13. விசேட தகைமைகள் (விளம்பரத்தில் குறிப்பிடப்பட்ட விசேட தகைமைகள் அல்லது அனுபவம் இவை இரண்டும் உமக்குண்டா? உண்டெனில், அவற்றின் முழு விபரங்களையும் திகதிகளுடன் தருக) :———.

14. ஒரு நீதிமன்றத்தில் எதும் குற்றவியல் குற்றத்தின் பொருட்டு தண்டிக்கப்பட்டதுண்டா? உண்டெனில், அவ்வழக்கின் திகதியையும் இலக்கத்தையும் குற்றத் தீர்ப்பின் தண்டனையையும் தருக :———.

15. கடன் தொல்லையில்லாதிருக்கின்றீரா? இல்லையாயின் எவ்வளவுக்குக் கடனாளியாக இருக்கின்றீர்? :———.

16. வேறு எதும் விபரங்கள் (விசேட உரிமைக் கோரிக்கைகள் ஆதியன) :———.

17. யார் யாரிடமிருந்து குணச் சான்றிதழ்கள் பெறப்பட்டிருக்கின்றனவோ அவர்களின் பெயர்களும் உத்தியோகப் பெயர்களும் (அச்சான்றிதழ்களின் மூலப்பிரதிகளை இணைக்காது நகல் பிரதிகளையே இணைத்தல் வேண்டும். அட்டவணைப்படுத்தப்பட்ட பதவிகளை வகிக்கும் உள்ளூராட்சிச் சேவை அங்கத்தவர்கள் இந்த வேண்டுகோளை நிறைவேற்றவேண்டியதில்லை) :———.

விண்ணப்பத்தில் நான் தந்துள்ள விபரங்கள் உண்மையானவையென்றும் செம்மையானவையென்றும் நான் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன். இதிலடங்கியுள்ள விபரங்களெதுவும் பொய்யானவை அல்லது செம்மையில்லாதவை எனக் காணின், தெரிவுக்கு முன்னர் தகைமை நீக்கத்துக்கும், நியமனத்துக்குப் பின்னர் அச்செம்மையின்மை கண்டுபிடிக்கப்படின், எனக்கு நட்டஈடு எதுவுமின்றி சேவை நீக்கத்துக்கும் நான் பாத்திரமாவேன் என்பதையும் நான் அறிவேன்.

திகதி ———.
———.
விண்ணப்பகாரரின் கையொப்பம்

செயலாளர் அவர்கட்கு,
உள்ளூராட்சிச் சேவை அதிகாரசபை,
தபால் பெட்டி 530, கொழும்பு 1.

---

## உள்ளூராட்சிச் சேவை

### வரிமதிப்பிடும் பரிசோதகர் பதவி

மேற்படி பதவிக்கான விண்ணப்பங்கள் உள்ளூராட்சிச் சேவை அதிகார சபையினால் கோரப்படுகின்றன.

2. வேதனம்.—இப்பதவிக்குரிய திரட்டிய வேதனம் வருமாறு—வருடாந்தம் ரூ. 4,152—17 × 144,8 × 180—ரூ. 8,040 வருடாந்தம் ரூ. 6,024 பெறுமுன் வினைத்திறமைகாண் தடைப்பரீட்சையும், வருடாந்தம் ரூ. 7,500 பெறுமுன் வினைத்திறமைகாண் தடையுமுண்டு. மண மானவர்களுக்கு அரசாங்க உத்தியோகத்தர்களுக்குப் பொருந்தும் வீத நிபந்தனைகளுக்கமைய ஒரு திருமணப்படியும் கொடுக்கப்படும்.

தேர்ந்தெடுக்கப்பட்ட பரீட்சார்த்தி, வருடாந்தம் ரூ. 6,024 பெறுவதற்கு முன்னுள்ள வினைத்திறமைகாண் தடைக்கு அப்பால் செல்வதற்கு முன்னர், இலங்கை தொழில்நுட்பக் கல்லூரியில், பெறுமானம் மதிப்பிடல் இயலில் தகுதித் தேர்வுப் பத்திரத்தில், உயர் தொழிலுக்குரிய முதற் பரீட்சையில் சித்தியடைந்திருக்க வேண்டும்.

3. வேண்டிய தகைமைகள் :— (அ) 26.02.1973 ல் 18 வயதுக்குக் குறையாமலும் 30 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

(ஆ) (1) இலங்கைத் தொழில் நுட்பக் கல்லூரியின் பெறுமானம் மதிப்பிடல் இயலில், தகுதித் தேர்வுப் பத்திரத்தில், இரண்டாவது கல்லூரிப் பரீட்சையில் சித்தி. அல்லது,

(2) இலங்கைத் தொழில் நுட்பக் கல்லூரியின் கட்டட நிர்மாண மூன்றுவது வருட மாலைப்பயிற்சி வகுப்பில் பூர்த்தி செய்வதுடன், கட்டடம் அளவை எடுத்தல் அளவை மட்டம் பார்த்தல் ஆகிய பயிற்சி வகுப்புகளில் 2 வருடப் பயிற்சியும் பின்பு, மதிப்பிடுவதில் 2 வருட நடைமுறை அனுபவமும் பெற்றிருத்தல் வேண்டும்.

மேற்கண்ட (ஆ) (1) ற் குறிப்பிடப்படும் தகைமையுள்ளோர் விரும்பப்படுவர்.

4. வரிமதிப்பிடலில் உரிய நடைமுறை அனுபவம் இல்லாத பரீட்சார்த்திகள் இருக்கும் பட்சத்தில் மேற்படி பந்தி 3 (ஆ) (2) தொழில் நுட்பத் தகைமைகள் பூர்த்திசெய்த ஆனால் நடைமுறை அனுபவம் இல்லாதவர்கள் விண்ணப்பங்களும் கருத்துக்கு எடுத்துக்கொள்ளப்படும். இத்தகைய பரீட்சார்த்தி ஒருவர் நியமிக்கப்படின் பின்வரும் வேதனப்படிகளில் அவர் அமர்த்தப்படுவர்.

ஒரு வருட நடைமுறை அனுபவம் உள்ளவர்கள்.

1 வது வருடம்—ரூபா 4,008 வருடாந்தம்.

2 வது வருடம்—ரூபா 4,152 வருடாந்தம்.

நடைமுறை அனுபவம் எதுவும் இல்லாதவர்களுக்கு.

1 வது வருடம்—ரூபா 3,864 வருடாந்தம்.

2 வது வருடம்—ரூபா 4,008 வருடாந்தம்.

3 வது வருடம்—ரூபா 4,152 வருடாந்தம்.

இவ்வருடம் இலங்கைத் தொழில் நுட்பக்கல்லூரியின் பெறுமானம் மதிப்பிடல் இயல் தகுதித் தேர்வுப் பத்திரத்தின் 2 வது கல்லூரிப் பரீட்சைக்குத் தோற்றியவர்கள், பெறுபேறுகளுக்காகக் காத்திருக்கும் வேளையில் விண்ணப்பிக்கலாம்.

5. இந்த அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையின் IV ம் பகுதியில் தொடக்கத்தில் பிரசுரிக்கப்பட்டிருக்கும் உள்ளூர் ஆட்சிச் சேவைப் பதவிகளுக்குரிய நியமனங்களுக்குப் பொருத்தமான பொது நிபந்தனைகளைப் பார்க்கவும்.

6. நியமனங்களுக்குப் பொருத்தமான பொது நிபந்தனைகளுடன் இணைக்கப்பட்டிருக்கும் படிவத்தில் கண்டமாதிரி விண்ணப்பங்கள் தயாரிக்கப்பட்டு 26.02.1973 ற்கு முன்னர் எனக்குக் கிடைக்கும்படி அனுப்பப்பட வேண்டும்.

7. அரசாங்க சேவையில் அல்லது உள்ளூராட்சி சேவையில் கடமை பார்க்கும் உத்தியோகத்தரிடமிருந்து வரும் விண்ணப்பங்கள் குறிப்பிட்ட திகதிக்குப் பின்னர் இக்கந்தோருக்கு வந்தால் அவ்வுத்தியோகத்தர்கள் குறிப்பிட்ட திகதிக்கு முன்னர் தமது விண்ணப்பங்களைச் சமர்ப்பித்திருந்து பகுதித் தலைவர் அல்லது மாநகரசபை ஆணையாளர் அல்லது உள்ளூராட்சி மன்றத் தலைவர் ஆகியோர், தாமதத்திற்குரிய உறுதியான காரணங்களைக் காட்டி, விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று சிபார்சு செய்து சான்றுரைத்தாலன்றி, அவ்வுத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

8. தகுதியுடைய பரீட்சார்த்திகளின் விண்ணப்பங்கள் மாத்திரம் கிடைத்தமைபற்றி அறியத்தரப்படும்.

எட்கா பெர்னன்டோ,
செயலாளர்,
உள்ளூராட்சிச் சேவை அதிகாரசபை.

த. பெ. 530, கொழும்பு 1,
1973 ம் ஆண்டு சனவரி மீ 17 ந் உ.

1–965 26.01.72 ந் திகதிய வர்த்தமானி இல. 44

### உள்ளூராட்சிச் சேவை

ஓவசியர்களது பதவி (மிருக வைத்தியம்)

மேற்படி பதவிக்கான விண்ணப்பங்கள் உள்ளூராட்சிச் சேவை அதிகார சபையினால் கோரப்படுகின்றன. தேர்ந்தெடுக்கப்பட்ட பரீட்சார்த்திகள் முதலில் உடனடியாக கொழும்பு மாநகரசபையின் விலங்கு மருத்துவப் பகுதிக்கு நியமிக்கப்படுவார்கள்.

2. இப்பதவிக்குரிய திரட்டிய வேதனம் வருடாந்தம் ரூபா 3,000—10 × 90—3,900/4,008—9 × 144—5,304. வருடாந்தம் ரூபா 4,008 ப் பெறுமுன் வினைத்திறமைகாண் தடையுண்டு.

3. **வேண்டிய தகைமைகள்.**

(அ) 26.02.1973 தேதியில் வயது 25 ற்கு மேற்படக்கூடாது ;

(ஆ) விண்ணப்பதாரிகள் விலங்கியல், தாவரவியல் பாடங்களாக சி. பா. த. பத்திரத்தில் அல்லது வேறு உயர்ந்த பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் வேண்டும் ; அல்லது

க.பொ.த.ப (சாதாரண தரம்) தரத்தில் 6 பாடங்கள் (இரு தட்வைக்கு மேற்படாமல்) கீழ்க்கண்டவற்றுடன் சேர சித்தியடைந்திருத்தல் வேண்டும் ;

(1) சிங்கள/தமிழ்,

(2) எண்கணிதம்/கணிதம் அத்துடன்,

(3) விலங்கியலும், தாவரசாஸ்திரமும் ;

4. இந்த அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையின் ஆரம்பத்தில் வெளியிடப்பட்டிருக்கும் IV வது பகுதியில் உள்ள, உள்ளூர் ஆட்சிச் சேவைப் பதவிகளுக்குரிய நியமனங்கள் சம்பந்தமான பொது நிபந்தனைகளைப் பார்க்கவும்.

5. நியமனங்களுக்குப் பொருத்தமான பொது நிபந்தனைகளுடன் இணைக்கப்பட்டிருக்கும் மாதிரி விண்ணப்பப் பத்திரத்தில் கண்டவாறு விண்ணப்பங்களை நிரப்பியனுப்பப்பட வேண்டும். 26.02.1973 க்குப் பிந்தாமல் எனக்குக் கிடைக்குமாறு அனுப்பப்பட வேண்டும்.

6. உள்ளூராட்சிச் சேவையில் வேலைபார்க்கும் உத்தியோகத்தர்களிட மிருந்து வரும் விண்ணப்பப் பத்திரங்கள் குறிப்பிட்ட திகதிக்குப் பின்னர் இக்கந்தோருக்கு வந்தால் அவ்வுத்தியோகத்தர்கள் குறிப்பிட்ட திகதி யன்றோ அல்லது அதற்கு முன்னரோ தமது விண்ணப்பங்களை அல்லது மாநகரசபை ஆணையாளர், உள்ளூராட்சிமன்றத் தலைவர் ஆகியோரிடம் சமர்ப்பித்திருந்து, மாநகரசபை ஆணையாளர், உள்ளூராட்சிமன்றத் தலைவர் ஆகியோர் தாமதத்திற்குரிய உறுதியான காரணங்களைக் காட்டி, விண்ணப்பப்பத்திரங்களை ஏற்றுக்கொள்ளவேண் டும் என்று சிபார்சு செய்தாலன்றி, அவ்வுத்தியோகத்தர்களின் விண் ணப்பப் பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

7. தகுதியுடைய விண்ணப்பதாரர்களுக்கு மாத்திரம் விண்ணப்பப் பத்திரம் கிடைத்தமைபற்றி அறிவிக்கப்படும்.

எட்கா பெர்னாண்டோ,
செயலாளர்,
உள்ளூராட்சிச் சேவை அதிகாரசபை.

த. பெ. 530, கொழும்பு 1.
1973 ம் ஆண்டு ஜனவரி மீ 17 ந் வ.

1—964—26.01.73 ந் திகதிய வர்த்தமானி இல. 44

---

### உள்ளூராட்சிச் சேவை

உதவி மருத்துவ உத்தியோகத்தர் பதவி—பிரசவமும் சிசு நலனும்

மேற்படி பதவிக்கான விண்ணப்பங்கள் உ. ஆ. சே. அ. சபையினால் கோரப்படுகின்றன. தேர்ந்தெடுக்கப்பட்ட பரீட்சார்த்தி முதலில் யாழ்ப் பாணம் மாநகர சபைக்கு நியமிக்கப்படுவார்.

2. **வேதனம்.**—இப்பதவிக்குரிய வேதன அளவுத்திட்டம் வருமாறு:— வருடாந்தம் ரூ. 9,600—4 × 360—11 × 480—ரூ. 16,320. ரூ. 14,880 பெறும் பொழுது 2 வருட இடைநிறுத்துகை. டி. வி. எச். அல்லது டி. ஆர். வி. ஓ. ஜி. அல்லது எம். ஓ. ஜி. (இலங்கை) தகைமை இல்லாத ஒரு உத்தியோகத்தர் மேற்கூறிய வேதன அளவுத் திட்டத்தில் வருடாந் தம் ரூ. 14,880 ற்கு மேற் செல்லமாட்டார். மணமானவர்களுக்கு அரசாங்க உத்தியோகத்தர்களுக்குப் பொருந்தும் வீதங்கட்கும் நிபந் தனைகட்கும் இணங்க ஒரு திருமணப்படியும் கொடுக்கப்படும்.

3. அரசாங்க நடைமுறைக்கேற்றவாறு இளைப்பாற்றுச் சம்பளம் அல் லாத படிகள் கொடுக்கப்படும்.

4. **வேண்டிய தகைமைகள்.**—விண்ணப்பக்காரர்கள் இலங்கை மருத் துவச் சபையினால் பதியப்படக்கூடிய எம். பி. பி. எஸ். (இலங்கை) அல்லது வேறு சமமான தகைமையைப் பெற்றிருத்தல் வேண்டும். பிரசவம் சிசுநலன் வேலைகளில் அனுபவமுடையவர்களுக்கு முன்னுரிமை கொடுக்கப்படும்.

5. தேர்ந்தெடுக்கப்பட்ட விண்ணப்பதாரர் யாழ்ப்பாணம் மாநகர சபை எல்லைக்குள் வசிக்க வேண்டும். தனிப்பட்ட முறையில் தொழில் நடத்தவும் அவர் தவிர்க்கப்படுவார்.

6. இவ்வர்த்தமானியின் தொடக்கத்தில் பிரசுரிக்கப்பட்டுள்ள உ. ஆ. சேவையினுள்ள பதவிகளுக்கான நியமனங்களுக்குப் பொருத்தமான பொது நிபந்தனைகளைப் பார்க்கவும்.

7. நியமனங்களுக்குப் பொருந்தும் பொது நிபந்தனைகளுடன் சேர்க் கப்பட்டுள்ள படிவத்தில் கண்டவாறு விண்ணப்பங்கள் தயாரிக்கப்பட்டு 12.03.73 க்கு முன்னர் எனக்குக் கிடைக்கக்கூடியதாக அனுப்பப்பட வேண்டும். குறிப்பிட்ட படிவத்தில் உள்ள 13 வது பகுதிக்குப் பதிலாக பின்வருவது சேர்க்கப்பட வேண்டும் :

" 13 (அ) பெறப்பட்ட வைத்திய உயர்தொழிலுக்குரிய தகைமைகள், திகதிகளுடனும் ஸ்தாபனங்களின பெயர்களுடனும்,

(ஆ) பிரசவ சிசுநலன் வேலையில் பெற்ற அனுபவத்தின் விபரங்கள் ".

8. உள்ளூராட்சிச் சேவை அதிகாரசபைச் செயலாளருக்கு விண்ணப்பங் களையோ அல்லது மற்றைய கடிதத் தொடர்புகளையோ விலாசமிடவேண்டுமே யன்றி, இத்திணைக்களத்திலுள்ள எந்த உத்தியோகத்தருக்கும் நேர்முகமாய் அனுப்பப்படக்கூடாது.

9. அரசாங்க சேவையிலோ அல்லது உள்ளூராட்சிச் சேவையிலோ வேலை பார்க்கும் உத்தியோகத்தரிடமிருந்து வரும் விண்ணப்பப் பத் திரங்கள் குறிப்பிட்ட திகதிக்குப் பின்னர் கந்தோருக்கு வந்தால் அவ் வுத்தியோகத்தர்கள் குறிப்பிட்ட திகதியன்றோ அல்லது அதற்கு முன்னரோ தமது விண்ணப்பங்களைப் பகுதித் தலைவர் அல்லது மாநகர சபை ஆணையாளர், உள்ளூராட்சி மன்றத் தலைவர் ஆகியோரிடம் சமர்ப் பித்திருந்து அப்பகுதித் தலைவர் அல்லது மாநகர சபை ஆணையாளர் உள்ளூராட்சி மன்றத் தலைவர் ஆகியோர் தாமதத்திற்குரிய உறுதியான காரணங்களைக் காட்டி, விண்ணப்பப் பத்திரங்களை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று சிபார்சு செய்தாலன்றி, அவ்வுத்தியோகத்தர்களின் விண்ணப்பப் பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

10. தகுதியுடைய விண்ணப்பதாரர்களுக்கு மாத்திரம் விண்ணப்பம் கிடைத்தமை பற்றி அறிவிக்கப்படும்.

எட்கார் பர்னாண்டோ,
செயலாளர்,
உ. ஆ. சே. அ. சபை.

த. பெ. 530,
கொழும்பு 1,
1973 ம் ஆண்டு சனவரி மீ 16 ந் வ.

1—963—26.01.73 ந் திகதிய வர்த்தமானி இல. 44

# பரீட்சைகளும், பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

## உள்ளூர் ஆட்சிச் சேவை

உள்ளூராட்சி மின்சார அத்தியட்சகர்களின் சேவையின் தரம் 4 ற்கு ஆட்சேர்ப்புக்கான பரீட்சை—1973.5.20

29.9.72 ந் தேதிய இலங்கை வர்த்தமானப் பத்திரிகையின் நாலாவது பகுதியில் வெளியிடப்பட்ட பெயர்களுக்கு மேலதிகமாக, தரம் 4 மின் அத்தியட்சகர் பதவிகளுக்கு நியமனத்தின் பொருட்டு உள்ளூராட்சிச் சேவை அதிகார சபையால் கீழ்க்கண்ட பரீட்சார்த்திகள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்கள் என்பது இத்தால் அறியத்தரப்படுகிறது :

(1) திரு. வி. கோபாலகிருஷ்ணு, யாழ்ப்பாணம் மா. ந. ச.

(2) திரு. பி. கே. முனிதாச, நீர்கொழும்பு மா. ந. ச.

(3) திரு. எ. கந்தசாமி, திருகோணமலை ந. ச.

(4) திரு. எல். எல். பெரேரா, வெல்லாவ கி. ச.

(5) திரு. எம். பி. கே. குணதிலக, களனி ப. ச.

(6) திரு. எல். பி. டபிள்யூ. மேவின், அகங்கம ப. ச.

(7) திரு. ஈ. நமரத்தின, பாணந்துறை ந. ச.

(8) திரு. டி. எம். அத்துகொறள, கோட்டை ந. ச.

(9) திரு. டபிள்யூ. கே. கிறிஸ்தோபர், களுத்துறை ந. ச.

உடனடியாக நியமனங்களைக் கொடுப்பதற்கு அதிகாரசபை கையேற்க வில்லை. பதவி வெற்றிடங்கள் வற்படும் சமயங்களில் நியமனங்கள் கொடுக்கப்படும்.

எட்கா பர்ணந்து,
செயலாளர்,
உ. ஆ. சே. அ. சபை.

உ. ஆ. சே. அ. சபை அலுவலகம்,
த. பெ. 530,
கொழும்பு,
1973 ம் ஆண்டு சனவரி மீ 15 ந் உ.

1–962—26.01.73 ந் திகதிய வர்த்தமானி இல. 44

---

# துணைவிதிகள்

## அளுத்கமைப் பட்டின சபை

பட்டின சபைகள் கட்டளைச் சட்டம்

(256 ம் அத்தியாயமான) பட்டின சபைகள் கட்டளைச் சட்டத்தின் 152, 156 ஆகிய பிரிவுகளின் கீழ் அளுத்கமைப் பட்டின சபையால் ஆக்கப் பட்டவையும் அக்கட்டளைச் சட்டத்தின் 153 ம் பிரிவினால் தமக்குரித் தாக்கப்பட்டுள்ள தத்துவங்களைக் கொண்டு அரசாங்க நிருவாக, உள்ளூ ராட்சி, உள்நாட்டலுவல்கள் அமைச்சரால் அங்கீகரிக்கப்பட்டவையுமான துணைவிதிகள்.

பீ. சிறிவர்த்தன,
மேலதிகச் செயலாளர்,
அரசாங்க நிர்வாக, உள்ளூராட்சி,
உள்நாட்டலுவல்கள் அமைச்சு.

கொழும்பு,
1973 ம் ஆண்டு சனவரி மீ 9 ந் உ.

### துணைவிதிகள்

காலத்திற்குக் காலம் திருத்தப்பட்டவாறான 1954 ஒற்ரோபர் 10,726 ம் இலக்கக் கசெற்றில் பிரசுரிக்கப்பட்ட அளுத்கமைச் சந்தைத் துணை விதிகள், அதன்கண்ணுள்ள அட்டவணை “ஆ” விற்குப் பதிலாகப் பின்வரும் அட்டவணையை இடுவதன் மூலம் இத்தால் மேலுந் திருத்தஞ் செய்யப்படுகின்றன.

அட்டவணை ‘‘ ஆ ’’

துணைவிதி 6

| வீதவரிகள் | | மாதமொன்றுக்கான வாடகை ரூ. | ச. |
|---|---|---|---|
| அறை இல. 1 | | 37 | 50 |
| அறை இல. 2 | | 37 | 50 |
| அறை இல. 3 | | 37 | 50 |
| அறை இல. 4 | | 37 | 50 |
| அறை இல. 5 | | 37 | 50 |
| அறை இல. 6 | | 37 | 50 |
| அறை இல. 7 | | 25 | 0 |
| அறை இல. 8 | | 7 | 50 |
| அறை இல. 9 | | 25 | 0 |
| அறை இல. 10 | | 25 | 0 |
| அறை இல. 11 | | 25 | 0 |
| அறை இல. 12 | | 25 | 0 |
| அறை இல. 13 | | 25 | 0 |
| அறை இல. 14 | | 25 | 0 |
| அறை இல. 15 | | 32 | 50 |
| அறை இல. 16 | | 32 | 50 |
| அறை இல. 17 | | 32 | 50 |
| அறை இல. 18 | | 19 | 0 |
| அறை இல. 19 | | 60 | 0 |
| அறை இல. 20 | | 90 | 0 |
| அறை இல. 21 | | 90 | 0 |
| அறை இல. 22 | | 60 | 0 |
| அறை இல. 23 | | 60 | 0 |
| அறை இல. 24 | | 90 | 0 |
| அறை இல. 25 | | 90 | 0 |
| அறை இல. 26 | | 60 | 0 |
| அறை இல. 27 | | 90 | 0 |
| அறை இல. 28 | | 19 | 0 |
| அறை இல. 29 | | 19 | 0 |
| அறை இல. 30 | | 19 | 0 |
| அறை இல. 31 | | 19 | 0 |
| அறை இல. 32 | | 19 | 0 |
| அறை இல. 33 | | 38 | 0 |
| அறை இல. 34 | | 15 | 0 |
| அறை இல. 35 | | 25 | 0 |
| அறை இல. 36 | | 25 | 0 |
| அறை இல. 37 | | 53 | 50 |
| அறை இல. 38 | | 53 | 50 |
| அறை இல. 39 | | 53 | 50 |
| அறை இல. 40 | | 28 | 50 |
| அறை இல. 41 | | 42 | 50 |
| அறை இல. 41அ | | 225 | 0 |
| மரக்கறிக்கூடம் | எஸ். 1 | 15 | 0 |
| மரக்கறிக்கூடம் | எஸ். 2 | 15 | 0 |
| மரக்கறிக்கூடம் | எஸ். 3 | 15 | 0 |
| மரக்கறிக்கூடம் | எஸ். 4 | 15 | 0 |
| மரக்கறிக்கூடம் | எஸ். 5 | 15 | 0 |
| மரக்கறிக்கூடம் | எஸ். 6 | 15 | 0 |
| மரக்கறிக்கூடம் | எஸ். 7 | 15 | 0 |
| மரக்கறிக்கூடம் | எஸ். 8 | 15 | 0 |
| பச்சிலைக்கூடம் | எஸ். 9 | 3 | 0 |
| மரக்கறிக்கூடம் | எஸ். 10 | 15 | 0 |
| மரக்கறிக்கூடம் | எஸ். 11 | 15 | 0 |
| மரக்கறிக்கூடம் | எஸ். 12 | 15 | 0 |
| சுண்ணாம்புக்கூடம் | எஸ். 13 | 3 | 0 |

1–876—26.01.73 ந் திகதிய வர்த்தமானி இல. 44

### கிராமச் சபைகள் கட்டளைச் சட்டம்

(257 ஆம் அத்தியாயமான) கிராமச் சபைகள் கட்டளைச் சட்டத்தின் 42 ம் பிரிவின்கீழ் காலி மாவட்டத்திலுள்ள கொஸ்கொடைக் கிராமப் பிரதேசத்தின் கிராமச் சபையினால் ஆக்கப்பட்டு அப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவின் கீழ் அரசாங்க நிர்வாக, உள்ளூராட்சி உள்நாட்டலுவல்கள் அமைச்சரால் ஆக்கப்பட்ட துணைவிதிகள்.

பி. சிறிவர்த்தன,
மேலதிகச் செயலாளர்,
அரசாங்க நிர்வாக, உள்ளூராட்சி,
உள்நாட்டலுவல்கள் அமைச்சு.

கொழும்பு.
1973 ம் ஆண்டு சனவரி மீ 6 ந் வ.

துணைவிதிகள்

**சந்தைகளும் முறைச் சந்தைகளும்**

1. சபையால் ஏற்றுக்கொள்ளப்பட்ட சந்தைகளும் முறைச் சந்தைகளும் சம்பந்தமான நியமத்துணைவிதிகளின் XXVII ம் பாகத்தின் முதலாவது துணை விதியின் நோக்கத்திற்காகச் சந்தையிலிருந்து ½ மைல் ஆரையைக் கொண்ட ஒரு வட்டத்துள் அடங்கிய நிலப்பரப்பு அருங்கல்ல சந்தையின் சந்தைப் பிரதேசமாகவிருத்தல் வேண்டும்.

2. சந்தைகள், முறைச் சந்தைகள் சம்பந்தமான நியமத்துணை விதிகள் கொஸ்கொடைக் கிராமப் பிரதேசத்துக்கு, அவை ஏற்புடையனவாகும் அளவுக்கு அவற்றின் 5 ம் துணைவிதிக்குப் பதிலாகப் பின்வரும் துணைவிதியை இடுவதன் மூலம் இதனால் திருத்தப்படுகின்றன :—

" 3. சந்தைக்குள்ளேயுள்ள கடைகளும் மீன்விற்பனைக்கென ஒதுக்கப்பட்ட கடைகளும் வருடா வருடம் கேள்விப்பத்திர மூலம் கொடுக்கப்படுதல் வேண்டும். தெரிவு செய்யப்பட்ட கேள்விக்காரர் தன்து கேள்விப்பத்திரத்திற் காட்டப்பட்டுள்ள வாடகையைக் கொடுத்தல் வேண்டும். சந்தை வளவினுள்ளேயுள்ள வேறெதேனும் கடையை அல்லது சந்தைவளவுகளினுள்ள ஏதேனும் திறந்த வெளியை உபயோகிப்பதற்கு அல்லது அதில் இருப்பதற்குப் பின்வரும் விதிதங்களிலான கட்டண மொன்று விதிக்கப்பட்டுக் கொடுபடுதல் வேண்டும் :—

| | | ஒரு நாளுக்கு ரூ. | ச. |
|---|---|---|---|
| 1. | நிரந்தரமான கடை ஒவ்வொன்றுக்கும் .. | 1 | 50 |
| 2. | தற்காலிகமான கடை ஒவ்வொன்றுக்கும் .. | 1 | 25 |
| 3. | 25 சதுர அடிக்கு மேற்படாத சந்தை வளவுகளினுள்ளஒரு திறந்த வெளியினகூறு ஒவ்வொன்றுக்கும் .. | | 50 |
| 4. | 25 சதுர அடிக்கு மேற்பட்டதும் ஆனால் 50 சதுர அடிக்கு மேற்படாததுமான சந்தை வளவுகளினுள்ள ஒரு வெளியின் கூறு ஒவ்வொன்றுக்கும் .. | - | 75 |
| 5. | 50 சதுர அடிக்கு மேற்பட்டதும் ஆனால் 100 சதுர அடிக்கு மேற்படாததுமான சந்தை வளவுகளினுள்ள ஒரு வெளியின் கூறு ஒவ்வொன்றுக்கும் .. | 1 | 00 |

1–742—26.01.73 ந் திகதிய வர்த்தமானி இல. 44

---

### கிராமச் சபைகள் கட்டளைச் சட்டம்

(257 ம் அத்தியாயமான) கிராமச் சபைகள் கட்டளைச் சட்டத்தின் 42 ம் பிரிவின் கீழ் கண்டி மாவட்டத்திலுள்ள மெததும்பறவிலுள்ள உடிஸ் பற்று வடக்குக் கிராமப் பிரதேசத்தின் கிராமச் சபையினால் ஆக்கப்பட்டு அப்பிரிவின் (3) ம் உட்பிரிவினால் அன்னருக்குரித்தாக்கப்பட்ட தத்து வங்களைக் கொண்டு அரசாங்க நிர்வாக, உள்ளூராட்சி, உள்நாட்டலுவல்கள் அமைச்சரால் அங்கீகரிக்கப்பட்ட துணைவிதிகள்.

பீ. சிறிவர்த்தன,
மேலதிகச் செயலாளர்,
அரசாங்க நிர்வாக, உள்ளூராட்சி,
உள்நாட்டலுவல்கள் அமைச்சு.

கொழும்பு,
1973 ம் ஆண்டு சனவரி மீ 9 ந் வ.

துணைவிதிகள்

**கிராமச் சந்தைகள்**

1. கிராமச் சந்தை ஒவ்வொன்றிலுமிருந்து இரண்டு மைல் ஆரையைக் கொண்ட ஒரு வட்டத்துள் இருக்கும் பிரதேசம் அத்தகைய சந்தையினது ஒவ்வொரு சந்தைப் பிரதேசமாகுமென இத்தால் வெளிப் படுத்தப்படுகின்றது.

2. சபையினால் தாபிக்கப்பட்ட கிராமச் சந்தை எதிலுமுள்ள கடை, இருக்கை அல்லது இடம் எதனையும் உபயோகிக்கும் அல்லது வசப் படுத்தும் ஒவ்வொருவரும், அத்தகைய உபயோகம் அல்லது வசப் படுத்தலுக்காக இதனோடுள்ள அட்டவணையில் காட்டப்பட்டுள்ள விகிதங் களின்படியான ஒரு கட்டணம் செலுத்த வேண்டும்.

**திரிந்து விற்போர்**

3. (1) தலைவரால் அதற்காக வழங்கப்பட்ட ஓர் உரிமத்தின் பேரி லன்றி எவரும் விரிந்து விற்பனை செய்யும் வியாபாரம் ஒன்றைத் தொடங்கவோ நடத்தவோ ஆகாது.

(2) (1) ம் பந்தியின் கீழ் வழங்கப்பட்ட உரிமம் ஒவ்வொன்றும் முன்னரே தலைவரால் நீக்கப்பட்டாலன்றி அது வழங்கப்பட்ட ஆண்டின் திசம்பர் மாதம் முப்பத்தோராந் நாளன்று முடிவுறுதல் வேண்டும்.

4. இத்துணைவிதியில்—

" தலைவர் " என்பது சபையின் தலைவர் எனப் பொருள்படும். அத்துடன்,

" சபை " என்பது கண்டி மாவட்டத்திலுள்ள மெததும்பறவிலுள்ள உடிஸ்பற்று வடக்குக் கிராமப் பிரதேசத்தின் கிராம சபை எனப் பொருள்படும்.

அட்டவணை

| | | | நாளொன்றுக்கான கட்டணம் ரூ. ச. |
|---|---|---|---|
| 1. | | சந்தைக் கட்டடத்தினுள்ளிருக்கும் 50 சதுர அடிக்கு மேற்படாத கடை, இருக்கை அல்லது இடம் ஒன்றுக்கு .. | 2 0 |
| 2. | | சந்தை வளவுக்குள்ளிருக்கும் அத்தகைய கடையொன்றுக்கு அதன் பரப்பு— | |
| | (அ) | 30 சதுர அடிக்கு மேற்படாதிருக்குமிடத்து .. | 1 0 |
| | (ஆ) | 30 சதுர அடிக்கு மேற்பட்டு ஆனால் 50 சதுர அடிக்கு மேற்படாதிருக்குமிடத்து .. .. | 1 25 |
| | (இ) | 50 சதுர அடிக்கு மேற்பட்டு ஆனால் 100 சதுர அடிக்கு மேற்படாதிருக்குமிடத்து .. .. | 1 50 |
| 3. | | வெளித்திடலில் உள்ள ஓர் இருக்கை அல்லது இடத்துக்கு அதன் பரப்பு— | |
| | (அ) | 9 சதுர அடிக்கு மேற்படாதிருக்குமிடத்து .. | 0 10 |
| | (ஆ) | 9 சதுர அடிக்கு மேற்பட்டு ஆனால் 25 சதுர அடிக்கு மேற்படாதிருக்குமிடத்து .. .. | 0 25 |
| | (இ) | 25 சதுர அடிக்கு மேற்பட்டு ஆனால் 50 சதுர அடிக்கு மேற்படாதிருக்குமிடத்து .. .. | 0 50 |
| | (ஈ) | 50 சதுர அடிக்கு மேற்பட்டு ஆனால் 100 சதுர அடிக்கு மேற்படாதிருக்குமிடத்து .. .. | 1 0 |

1–875—26.01.73 ந் திகதிய வர்த்தமானி இல. 44

---

## நானாவித அறிவித்தல்கள்

**புங்குடுதீவுக் கிராமசபை, புங்குடுதீவு**

*கசாப்புக்காரர்பற்றிய சட்ட அறிவித்தல்*

கசாப்புக்காரர்பற்றிய சட்டத்தின் அத்தியாயம் 272 இன் 7(2) வது பிரிவின் தாற்பரியப்படி இதன் கீழ்க்காணும் அட்டவணையிற் காணப்படும் பேர்வழிக்காரரிடமிருந்து 1973 ம் ஆண்டுக்கு கசாப்புத் தொழில் நடாத்த அனுமதி தரும்படி விண்ணப்பம் கிடைத்துள்ளது.

இந்தப் புங்குடுதீவுக் கிராமசபை இடப்பரப்பில் வசிப்போர் எவரேனும் குறிக்கப்படும் அனுமதி வழங்குவதை மறுக்க விரும்பினால் மறுப்பிற்கான காரணத்தை இவ்வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட பதினான்கு (14) நாட்களுக்குள் இணைப்பிரதிகளில் எனக்கு அனுப்பிவைக்கும்படி இத்தால் வேண்டிக்கொள்கின்றேன்.

அட்டவணை

| | விண்ணப்பகாரரின் பெயரும் விலாசமும் | வியாபாரம் | வியாபாரம் செய்யுமிடம் |
|---|---|---|---|
| 1. | திரு. குமாரு கந்தசாமி, 3 ம் வட்டாரம், புங்குடுதீவு | ஆட்டிறைச்சிக்கடை | கடை இல. 1, பொதுச் சந்தை, புங்குடுதீவு |
| 2. | திரு. மருதன் சின்னத்துரை, 12 ம் வட்டாரம், புங்குடுதீவு | ஆட்டிறைச்சிக்கடை | கடை இல. 2, பொதுச் சந்தை, புங்குடுதீவு |

கிராமசபை அலுவலகம்,
புங்குடுதீவு,
1972 ம் ஆண்டு டிசம்பர் மீ 12 ந உ

கா. மதியாபரணம், ஜே பீ,
தலைவர்,
கிராமசபை, புங்குடுதீவு.

1–588—26.01.73 ந் திகதிய வர்த்தமானி இல. 44

---

## முள்ளிப்பொத்தானை கிராம சபை

இறைச்சிக்காரர்பற்றிய சட்ட அறிவித்தல்

இறைச்சிக்காரர் பற்றிய 1947 ம் ஆண்டின் 44 ம் திருத்த சட்டத்தின் 7 ம் பிரிவின்படி கீழ் காணப்படும் அட்டவணையில் உள்ளவரிடமிருந்து 1973 ம் வருடத்திற்கு 01.01.1973 ம் திகதி முதல் இறைச்சிக்கடை நடாத்துவதற்கு அனுமதிப்பத்திரம் தருமாறு விண்ணப்பம் கிடைத்துள்ளது.

எனவே, இக்கிராமாட்சி மன்ற நிர்வாக எல்லைக்குள் வாழ்பவர்கள் எவரேனும் இவ்வனுமதிப்பத்திரம் வழங்கலை மறுக்க விரும்பினால், அவர்கள் இவ்வர்த்தமானி விளம்பரத் திகதியிலிருந்து பதினான்கு (14) நாட்களுக்குள் மறுப்புக்கான காரணங்காட்டி, இரு பிரதிகளில் எழுத்துமூலம் எமக்குச் சமர்ப்பிக்கவேண்டும்.

அட்டவணை

| பெயரும் விலாசமும் | வியாபாரம் | இடம் |
|---|---|---|
| ஜனாப் அ. அப்துல் றஹீம், 233, யுனிட் 7, முள்ளிப்பொத்தானை | மாட்டிறைச்சி | கிராமசபை இறைச்சி விற்பனைசாலை, 96 ம் கட்டைச் சந்தி, முள்ளிப்பொத்தானை |

முள்ளிப்பொத்தானை கிராமச்சபை அலுவலகம்,
முள்ளிப்பொத்தானை,
1973 ம் ஆண்டு ஜனவரி மீ 2 ந உ.

யா. அப்துல் ஜபார்,
தலைவர்,
முள்ளிப்பொத்தானை கிராம சபை.

1–594—26.01.73 ந் திகதிய வர்த்தமானி இல. 44

---

## உடுவில் கிராம சபை

இறைச்சிக்காரர்பற்றிய சட்டம் (அத்தியாயம் 272) 7 ம் பிரிவின் தாற்பரியப்படி இதன்கீழ் காணப்படும் அட்டவணையில் காண்பவரிடமிருந்து 1973 ம் ஆண்டுக்கு இறைச்சிக் கடைக்கு உத்தரவுப் பத்திரம் தரும்படி விண்ணப்பம் கிடைக்கப்பட்டிருக்கிறது.

இந்தக் கிராமசபை இடப்பரப்பில் வசிப்போர் எவரேனும் உத்தரவுப்பத்திரம் கொடுப்பதை மறுக்க விரும்பினால் மறுப்புக்கான காரணங்களை இந்த அறிவித்தல் " கெசற்றில் " பிரசுரிக்கப்பட்ட திகதியிலிருந்து பதினான்கு நாட்களுக்கு இடையில் இணைப்பிரதிகளாக எமக்கு அனுப்பி வைக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

அட்டவணை

| விண்ணப்பகாரர் பெயர் | விலாசம் | வியாபாரம் செய்யும் இடம் |
|---|---|---|
| பக்கீர் முகமட் சேகுமுகைதீன் | இணுவில் | இணுவில் சந்தை, இணுவில் ஆட்டிறைச்சிக்கடை |

கிராமசபை அலுவலகம்,
உடுவில், சுன்னாகம்,
1973 ம் ஆண்டு ஜனவரி மீ 4 ந உ.

ச. முத்துலிங்கம்,
தலைவர்,
உடுவில் கிராம சபை.

1–532—26.01.73 ந் திகதிய வர்த்தமானி இல. 44

---

## இறைச்சிக்கடைக்காரர்பற்றிய சட்டம்—அறிவித்தல்

இறைச்சிக்கடைக்காரர்பற்றிய கட்டளைச்சட்டம் (அத்தியாயம் 272) 7(2) ம் பிரிவின் தாற்பரியப்படி இதன் கீழ்க்காண்போரிடமிருந்து 1973 ம் ஆண்டுக்கு லைசன்ஸ் வழங்கும்படி விண்ணப்பம் கிடைத்துள்ளது.

இக்கிராமச்சபை இடப்பரப்பில் வதிவோர் எவரேனும் கீழ்க்காண்பவருக்கு லைசன்ஸ் வழங்குவதை மறுக்க விரும்பினால், அம்மறுப்பிற்கான காரணங்களை இவ்வறிவித்தல் வர்த்தமானியிற் பிரசுரமான திகதியிலிருந்து 14 நாட்களுக்குள் இணைப்பிரதிகளாக எமக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

அட்டவணை

| | விண்ணப்பகாரரின் பெயர் | வியாபாரத்தின் தன்மை | இடம் |
|---|---|---|---|
| 1. | எம். பி. எஸ். ஜே. ஹாஜாநெயினா முகம்மது | மாட்டிறைச்சிக்கடை | எருக்கலம்பிட்டி |
| 2. | எம். பி. எஸ். ஜே. ஹாஜாநெயினா முகம்மது | ஆட்டிறைச்சிக்கடை | எருக்கலம்பிட்டி |

கிராமச்சபை அலுவலகம்,
எருக்கலம்பிட்டி.
1973 ம் ஆண்டு ஜனவரி மீ 2 நஉ.

ம. நூறு முகம்மது,
தலைவர், கி.ச.,
எருக்கலம்பிட்டி.

1–777—26.01.73 ந் திகதிய வர்த்தமானி இல. 44

## வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

ஸ்ரீ லங்கா (இலங்கை) குடியரசு வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.

ஸ்ரீ லங்கா (இலங்கை) குடியரசு வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ்வர்த்தமானி களுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும், நேரமும் கீழ் குறிப்பிடப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் குடியரசு வர்த்தமானியில் பிரசுரிக்க விரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாச தாரருக்கு தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும். குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்படட திகதிகளிலே அறிவித்தல்களைப் பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சகத் திணைக்களத்துக்கு வந்து சேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.

குடியரசு வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் யாவும் அரசாங்க பிரசுராலய அதிபர், தபாற் பெட்டி இல. 500, செயலகம், கொழும்பு என்ற விலாசத்திற்கு நேரடியாகச் சேர்ப்பிக்கப்பட வேண்டும். அரசாங்க அழுத்தகர் வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் எதுவும் ஏற்றுக்கொள்ளமாட்டார்.

முக்கிய கவனிப்பு.—குடியரசு வர்த்தமானி விளம்பரங்களுக்கான பணங்கள் யாவும் அரசாங்க அழுத்தகரினால் ஏற்றுக்கொள்ளப்படும் என்பதையும், அரசாங்க பிரசுராலய அதிபரால் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா என்பதையும் கவனத்திற் கொள்க.

### அட்டவணை

| மாதம் | | வெளியீட்டு நாள் | | | அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும் | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| சனவரி | — | 5. 1.73 | வெள்ளி | .. | 29.12.72 | வெள்ளி | .. | ந. ப. | 12. |
| | | 12. 1.73 | வெள்ளி | .. | 5. 1.73 | வெள்ளி | .. | ந. ப. | 12.00 |
| | | 19. 1.73 | வெள்ளி | .. | 12. 1.73 | வெள்ளி | .. | ந. ப. | 12.00 |
| | | 26. 1.73 | வெள்ளி | .. | 19. 1.73 | வெள்ளி | .. | ந. ப. | 12.00 |
| பெப்புருவரி | .. | 2. 2.73 | வெள்ளி | .. | 26. 1.73 | வெள்ளி | .. | ந. ப. | 12.00 |
| | | 9. 2.73 | வெள்ளி | .. | 2. 2.73 | வெள்ளி | .. | ந. ப. | 12.00 |
| | | 15. 2.73 | வியாழன் | .. | 9. 2.73 | வெள்ளி | — | ந. ப. | 12.00 |
| | | 23. 2.73 | வெள்ளி | .. | 15. 2.73 | வியாழன் | .. | ந. ப. | 12.00 |
| மாச்சு | .. | 2. 3.73 | வெள்ளி | .. | 23. 2.73 | வெள்ளி | .. | ந. ப. | 12.00 |
| | | 9. 3.73 | வெள்ளி | .. | 2. 3.73 | வெள்ளி | — | ந. ப. | 12.00 |
| | | 16. 3.73 | வெள்ளி | .. | 9. 3.73 | வெள்ளி | .. | ந. ப. | 12.00 |
| | | 23. 3.73 | வெள்ளி | .. | 16. 3.73 | வெள்ளி | .. | ந. ப. | 12.00 |
| | | 30. 3.73 | வெள்ளி | .. | 23. 3.73 | வெள்ளி | .. | ந. ப. | 12.00 |
| ஏப்றல் | .. | 6. 4.73 | வெள்ளி | .. | 30. 3.73 | வெள்ளி | .. | ந. ப. | 12.00 |
| | | 11. 4.73 | புதன் | .. | 6. 4.73 | வெள்ளி | .. | ந. ப. | 12.00 |
| | | 19. 4.73 | வியாழன் | .. | 11. 4.73 | புதன் | .. | ந. ப. | 12.00 |
| | | 27. 4.73 | வெள்ளி | .. | 19. 4.73 | வியாழன் | .. | ந. ப. | 12.00 |

அரசாங்க அச்சகத் திணைக்களம்,
கொழும்பு,
1972 ம் ஆண்டு ஒகத்து மீ 18 ந் த..

எல். டபிள்யூ. பீ. பீரிஸ்,
அரசாங்க அழுத்தகர்.

ஸ்ரீ லங்கா (இலங்கை) அரசாங்க அச்சகத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.